Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 27 ஞாயிற்றுக்கிழமை (11.01.2015) பக்கங்கள் 20 ஓசை – 103

## தமிழரசுக்கட்சியிலிருந்து அனந்தி, சிவகரன் இடை நீக்கம்

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், மற்றும் தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணிச்செயலாளர் வி.எஸ்.சிவகரன் இருவரையும் தமிழரசுக்கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் இ.துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபாலவிற்கு ஆதரவளிப்பதென கூட்டமைப்பின் தீர்மானத்திற்கு, முரணாக கருத்து வெளியிட்டமை மற்றும் குறித்த தீர்மானத்திற்கு முரணான வகையில் பிரசாரம் மேற்கொண்டமை தொடர்பான குற்றச்சாட்டே இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழரசுக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவிக்கையில்,

கட்சியின் கட்டுப்பாட்டை மீறி செயற்பட்டவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம். இதன் முதற்கட்ட நடவடிக்கையாக பதவியில் இருந்தும் கட்சி உறுப்புரிமையில் இருந்தும் இடைநீக்கியுள்ளதாக அறிவிக்கவுள்ளோம்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## இன சமத்துவத்தை ஏற்படுத்த புதிய அரசு முயற்சிக்கவேண்டும் வலியுறுத்துகிறது இந்தியா

(புதுடில்லி)

இலங்கையில் நடைபெற்று முடிவடைந்த ஜனாதிபதித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய அரசாங்கம் அனைத்து இனங்களுக்குமிடையில் சமத்துவத்தை ஏற்படுத்த முயற்சிக்கவேண்டுமென இந்தியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சயீட் அக்பர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் புதிய அரசின் உருவாக்கம் வினைத்திறனான மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கான நேர்மையான அடித்தளத்தை இடுவதற்கு புதிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

(19) ஆம் பக்கம் பார்க்க

# அச்சத்தால் வெளியேறியோரை நாட்டிற்கு திரும்புமாறு அழைப்பு



(கொழும்பு)

இலங்கையிலிருந்து அச்சம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிய மாற்றுக்கருத்துடையோர், மற்றும் ஊடகவியலாளர்களை நாடு திரும்புமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ராஜித சேனாரத்தன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இணையத்தளங்கள் மீதான தணிக்கையை உடனடியாக நீக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இது தவிர தொலைபேசிகளை இடைமறித்து ஒட்டுக்கேட்டல், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல்வாதிகளைக் கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகளையும் உடனடியாக கைவிடுமாறும் கேட்டுள்ளார்.

இதேவேளை கடந்த அரசாங்கத்தின் தாக்குதலுக்கு பயந்து நாட்டை விட்டுத் தப்பியோடிய ஊடகவியலாளர்கள் மற்றும் மாற்றுக்கருத்துடையோரை நாடு திரும்புமாறும் அவர் அழைத்துள்ளார்.

நேற்றிலிருந்து நீங்கள் (நேற்று முன்தினம்) எங்களை விமர்சிக்கலாம். ஊடக

(19) ஆம் பக்கம் பார்க்க

### மைத்திரியின் அமைச்சரவையில் பங்கேற்காது கூட்டமைப்பு

புதிதாக அமையவுள்ள மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்தின் அமைச்சரவையில் பங்கேற்று எந்தவித அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்ளாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கவுள்ளதாக செய்தி

(19) ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சரவையில் பங்கேற்பதா? கூட்டமைப்பில் பேசவில்லை என்கிறார் சுரேஷ்

இலங்கையில் புதிய ஜனாதிபதியின் தலைமையில் உருவாக்கப்படவிருக்கும் அமைச்சரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்பது தொடர்பில் கூட்டமைப்பிற்குள் எவ்விதமான பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளப்படவில்லை என சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் புதிய அமைச்சரவை சில நாட்களில் உருவாக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் குறித்த அமைச்சரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கத்துவம் பெறுமா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழர் அரசியல் வரலாற்றில் தமிழரசுக் கட்சியாக இருக்கட்டும், தமிழர் விடுதலைக் கூட்டணியாக இருக்கட்டும் பின்னர் வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கட்டும். அனைவருமே தமிழ் மக்களுடைய உரிமைகளுக்காக போராடினோமே தவிர, அமைச்சுக்களுக்காக அல்ல.

நாங்கள் அவ்வாறு அமைச்சுக்களை பெற்றுக்கொண்டு நக்குண்டு நாவிழந்தால், நாளை தமிழ் இனமே எம்மைத் தூற்றும் நிலை நிச்சயமாக உருவாகும்.

எனவே இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன முடிவினை எடுக்கப்போகின

(19) ஆம் பக்கம் பார்க்க


## பதவியிலிருந்து விலகினார் வடமாகாண ஆளுநர்?

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறிதனது பதவியிலிருந்து விலகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலை அடுத்து புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்பட்ட நிலையில் ஆளுர் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடக்கு மாகாண ஆளுநராக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரியாக கடமையாற்றிய வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளரும், ஐக்கியநாடுகள் சபையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதியுமாகிய எச்.எம்.ஜீ.எஸ்.பள்ளிகக்கார நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பாதுகாப்பு அமைச்சிற்கு செயலாளர் நியமனம்



புதிய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக முன்னாள் சுற்றாடல் அமைச்சர் பி.எம்.யூ.டி. பஸ்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவிதத்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக .கோத்தாபய ர்ாஜபக்ஷ பணியாற்றிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# வர்த்தக நிறுவனங்களுக்கு எதிராக கடந்த ஆண்டில் 530 வழக்குகள்

யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தக நிறுவனங்களிடமிருந்து தண்டப்பணமாக கடந்த வருடம் மட்டும் நீதிமன்றத்தால் 25 இலட்சத்து 26 ஆயிரத்து 750 ரூபாய் அறவிடப்பட்டுள்ளதாக யாழ். பாவனையாளர் அதிகாரசபையின பொறுப்பதிகாரி த.வசந்தசேகரன், நேற்று தெரிவித்தார்.

குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக 530 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதாகவும் அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, நிறைகுறைந்த பாண் விற்பனை போன்ற குற்றங்களுக்காகவே இவர்களுக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்..

குறித்த வர்த்தக நிறுவனங்களில் அழகுசாதனப் பொருட்கள், பாண், நிறப்பூச்சு, சோடா என்பவற்றை காலாவதியான திகதிகளுடன் விற்பனை செய்த குற்றத்தின் பேரில் வழக்குகள் அதிகளவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய அரசின் நிதி உதவியுடன் பொறியியல், விவசாய பீடங்கள்

## துணைத்தூதரக தற்காலிக கொன்சல்ற் ஜெனரல் மூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பொறியியல் மற்றும் விவசாய கற்கை பீடங்கள், இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் 600 மில்லியன் ரூபாய் செலவில் கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைக்கப்படவுள்ளதாக இந்தியத் துணைத் தூதரக தற்காலிக கொன்சல்ற் ஜெனரல் எஸ்.டி. மூர்த்தி, தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 2012 ஆம் ஆண்டு இந்த கற்கை பீடங்களை அமைப்பதற்காக வேண்டுகோள் எமக்கு விடுவிக்கப்பட்ட நிலையில் அப்போது இருந்த இந்திய உயர்ஸ்தானிகர் மூலம் இந்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டும் இருந்தது.

இதற்குரிய புரிந்துணர்வு ஒப்பந்தம் தற்போது கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன. இந்த வருடம் நிர்மாணப்பணிகள் ஆரம்பமாகவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.



# சிற்றூர்தியிலிருந்து இறக்கப்பட்டு இளைஞர் மீது தாக்குதல்

## ஆவரங்காலில் நேற்றிரவு சம்பவம்

யாழிலிருந்து பருத்தித்துறை நோக்கி தனியார் சிற்றூர்தியில் பயணித்த இளைஞர் ஒருவர் ஆவரங்கால் பகுதியில் மூவர் கொண்ட குழுவினால் சிற்றூர்தியில் இருந்து இறக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 7.45 மணியளவில் ஆவரங்கால்-வல்லை வீதியில் இடம்பெற்றுள்ளது. பருத்தித்துறை கற்கோவளததைச் சேர்ந்த பாலபாரதி ஜெனார்த்தன் (வயது-28) என்ற இளைஞரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

மூவர் கொண்ட குழுவால் வழிமறிக்கப்பட்ட 750 இலக்க தனியார் சிற்றூர்தியில் பயணித்த பிரஸ்தாப இளைஞர் பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்டு கடுமையாக தாக்கப்பட்ட வேளையில் அச்சிற்றூர்தி அங்கேயே தரித்து நின்றுள்ளது. தாக்குதலின் பின்னர் அவ்விளைஞர் அதே சிற்றூர்தியில் மீண்டும் ஏற்றப்பட்டு பருத்தித்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் இத்தாக்குதல் குறித்து முறையிடப்படுள்ளதுடன் இச்சம்பவம் குறித்து பருத்தித்துறை சிற்றூர்தி சேவைப்பிரிவிலும் முறையிட்டுள்ளார். (18)

# DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | SUNDAY |
|---|---|
| Am 05.00-07.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00-08.00 | MORNING SONG |
| Am 08.00-09.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00-10.00 | புதுயுகம் |
| Am 10.00-10.30 | தமிழ் பேசு தமிழா |
| Am 10.30-11.30 | அதிர்வுகள் |
| Am 11.30-12.00 | காதல் கீதங்கள் |
| Am 12.00-12.30 | Hello சிரிக்க சிரிக்க DD |
| PM 12.30-01.00 | ஆரோகணம் |
| PM 01.00-04.00 | சிறப்பு திரைப்படம் |
| PM 04.00-05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00-06.00 | அதிர்வுகள் |
| PM 06.00-07.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00-07.30 | IT.Com |
| PM 07.30-08.00 | மக்கள் முகம் |
| PM 08.00-08.20 | பிரதான செய்தி |
| PM 08.20-08.30 | Song |
| PM 08.30-09.00 | இதய ஊஞ்சல் |
| PM 09.00-11.30 | ஆங்கிலத்திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30-12.00 | நீங்காத நினைவுகள் |




# திருவாசக முற்றோதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி (புலுட்டையன்) பிள்ளையார் ஆலயத்தில் இன்று திருவாசக முற்றோதல் இடம் பெறுகின்றது.

இன்றுகாலை பிள்ளையாருக்கு விசேட பூசை இடம் பெறுவதுடன் திருவாசக முற்றோதல் சிறப்புற இடம் பெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார்.

# இறால் சீசன் முல்லையில் ஆரம்பம்



முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவில் இறால் பிடிக்கப்படுவதால், இறால் பிடிப்பதில் மீனவர்கள் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடலில் பிடிக்கப்படும் வெள்ளை இறால் ஒரு கிலோகிராம் 900 ரூபாவும் கருப்பு இறால் ஒரு கிலோகிராம் 1,500 இலிருந்து 3,000 ரூபாவுக்கும், சிங்கி இறால் ஒரு கிலோகிராம் 2,500 ரூபாவுக்கும் மட்ட சிங்கி இறால் ஒரு கிலோகிராம் 700 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்

## சாவகச்சேரி சந்தையில்

# கணவாயின் வயிற்றில் மீன்கள்; வியாபரிகளின் தந்திரம் அம்பலம்

கணவாயின் வயிற்றில் பல்லின மீன்குஞ்சுகளை வைத்து மீன் வாங்குவோரை ஏமாற்றும் சாவகச்சேரி மீன் சந்தை வியாபரிகள் குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிலோ ஒன்று 500 ரூபா வரையில் தற்போது விற்கப்படும் கணவாயின் வயிற்றில் மிக மலிவான திரளி, சூடை, கீளி, நகரை போன்ற மீன் குஞ்சுகளை மிக இலாவகமாக திணித்து மீன்களை பற்றி தெரியாதவர்களாகவும் வயது முதிர்ந்தவர்களாகவும் வருவோருக்கு அவற்றை ஆசை வார்த்தை பேசி சாதூரியமாக விற்பனை செய்து அவர்களை ஏமாற்றுகின்றனர்.

இதை அறியாத சிலர் கணவாய்களை வாங்கிச் சென்று வீட்டில் சுத்தம் செய்யும் போது தான் தாம் ஏமாற்றப்பட்டுள்ளமை தெரியவருகின்றது.

ஆனாலும் இது குறித்து மீன்வியாபாரிகளிடம் மீளவும் சென்று வினவி நேரத்தை போக்காது அசட்டையாகவே விட்டு விடுகின்றனர்.

நேற்றும் இவ்வாறே மட்டுவில் பகுதியில் இருந்து சென்ற முதியவர் ஒருவர் சாதுரியமாக ஏமாற்றப்பட்டார்.

இதுவிடயம் குறித்து தனது விசனத்தை தெரிவித்ததுடன் அந்த வியாபாரி மீது தனது மனக்குமுறலையும் கொட்டித்தீர்த்தார். (இ)

# தேங்காயின் விலை அதிகரிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி சந்தைகளில் தேங்காயின் விலை வெகுவாக அதிகரித்துள்ளது.

தொடர்மழை வீழ்ச்சியை அடுத்து தேங்காய்வரத்து தென்மராட்சியிலுள்ள கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளில் மிகக்குறைவாக காணப்படுவதால் தேங்காய்களின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ளது.

40 ரூபா முதல் 60 ரூபாவரையில் இந்த அதிகரிப்பு காணப்படுகின்றது.

# பொலிஸாருக்கு எதிராக 16 முறைப்பாடுகள் பதிவு

பொய்யான வழக்கின் கீழ் கைது செய்தல், முறையான நடவடிக்கை எடுக்காமை, காரணம் குறிப்பிடாமல் கைது செய்தல், நியாயமற்ற முறையில் தீர்ப்பு வழங்குதல் போன்ற குற்றங்களுக்காக வடமாகாணத்தில் பொலிஸாருக்கு எதிராக கடந்த ஆண்டில் 16 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வடமாகாண பணிப்பாளர் க.தியாகராஜா, நேற்று தெரிவித்தார்.


அதில் 14 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், கடந்த டிசம்பர் மாதம் செய்யப்பட்ட 2 முறைப்பாடுகளே இதுவரை தீக்கப்படாதுள்ளதாகவும் அதற்குரிய அறிக்கைகளை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

வெளி மாவட்டங்களிலிருந்து வடமாகாண பொலிஸாருக்கு எதிரான முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுவது இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# வன்னேரி, தேவன் குளத்தை

# தனித்தனியாக புனரமைக்க திட்டம்

## கிளி.நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

வன்னேரிக்குளத்தையும் தேவன குளத்தையும் தனித்தனியாக புனரமைப்பதற்கான திட்டங்கள் வரையப்பட்டுள்ளன. நிதி கிடைத ததும் இவ்விரு குளங்களும் புனரமைக்கப்படும் என கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.விகிர்தன் நேற்று தெரிவித்தார்.

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தையும் பூநகரியின் தேவன்குளத்தையும் இணைத்து நீர்த்தேக்கமொன்றினை உருவாக்கும்படி வன்னேரிக்குளம் மற்றும் ஜெயபுரம் கிராம மக்கள் கடந்த பல ஆண்டுகளாக கோரிக்கைவிடுத்து வருகின்றனர்.

1953ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட குடியேற்றத்திட்டத்தில் 1954 ஆம் ஆண்டு வன்னேரிக் குளம் உருவாக்கப்பட்டது. இக்குளத்தின் மூலம் 375 ஏக்கருக்கு மேலான நிலப்பரப்புக்கு தற்போது நீர்ப்பாசனம் செய்யப்படுகின்றது.

பூநகரியின் தேவன்குளம் ஜெயபுரம் கிராம மக்கள் பயன்படுத்தக்கூடியவாறு உருவாக்கப்பட்டது. ஆனால் போர்ச் சூழல் காரணமாக இக்குளத்தின் கீழான 526 ஏக்கர் காணிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் மேற்கொள்ளமுடியாத நிலை தற்போது காணப்படுகின்றது.

இந்நிலையில் வன்னேரிக் குளத்தையும் தேவன்குளத்தையும் இணைத்து பெரும் நீர்த்தேக்கத்தை உருவாக்குவதன் மூலம் 1,000 ஏக்கருக்கு மேலான நிலப்பரப்புக்கு நீர்ப்பாசனம் செய்யமுடியுமென்பதுடன், வயல் நிலத்திற்காக 1983ஆம் ஆண்டு தொடக்கம் காத்திருக்கும் ஜெயபுரம் கிராம மக்களுக்கும் வயல் நிலம் கிடைக்கும்.

மீள்குடியேற்றம் நடைபெற்ற காலங்களில் கிளிநொச்சியில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள், அரச செயலக கூட்டங்கள், பிரதேச செயலக கூட்டங்கள், வன்னேரிக் குளம் மற்றும் ஜெயபுரம் கிராமங்களினால் நடாத்தப்பட்ட கூட்டங்களில் வன்னேரிக்குளத்தையும் தேவன்குளத்தையும் இணையுங்கள் என்றும் நீர்த்தேக்கத்தினை உருவாக்கும்படியும தொடர்ச்சியாக மக்கள் கோரிக்கை விடுத்துவந்தனர்.

இந்நீர்த்தேக்கத்தினை உருவாக்குவதற்கு போர் காலத்தில் புதைக்கப்பட்ட தடையாக மிதிவெடிகள் முக்கிய காரணமாக கூறப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.விகிர்தனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கூறியவாறு தெரிவித்தார்.


மேலும் இரு குளங்களையும் இணைப்பதென்பது மக்களின் கோரிக்கையாக இருந்தாலும் அது ஒரு பெரும் திட்டம் என்பதன் காரணமாக எதிர்காலத்தில்தான் இத்திட்டம் நிறைவேற்றப்படக்கூடிய வாய்ப்புகள் உள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

# நினைவுதினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் படுகொலைசெய்யப்பட்டவர்களின் 41 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள நினைவுத் தூபிக்கு நேற்று மலர்மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

# மாநாட்டு மண்டபம் திறந்து வைப்பு




(காரைநகர்)

கனடா - காரை கலாசார மன்றத்தின் அனுசரணையில் கலாநிதி. ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் மேம்படுத்தப்பட்ட பல்லூடக மாநாட்டு மண்டபம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப்பாடசாலை மாணவர்களின் கல்வித்தர அபிவிருத்தியின் ஓர் அங்கமாக பாடசாலையின் பல்லூடக அறையை மேம்படுத்தும் திட்டத்தை கனடா-காரை கலாசார மன்றம் அண்மையில் முன்னெடுத்திருந்தது.

அதிபர் திருமதி.வாசுகி தவபாலன் தலைமையில் நடைபெற்ற பல்லூடக மாநாட்டு மண்டப திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கனடா - காரை கலாசார மன்றத் தலைவர் தம்பிஐயா பரமானந்தராஜா கலந்துகொண்டார். கௌரவ விருந்தினர்களாக ஓய்வுநிலை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ப.விக்னேஸ்வரன், காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஓய்வுநிலை கல்வி அதிகாரிகள், அயல்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், உள்ளூர் சமூகசேவை அமைப்புகளின் உறுப்பினர்கள், புலம்பெயர் காரை அமைப்புகளின் உறுப்பினர்கள், மாணவர்கள் எனப்பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

# புலமைப்பரிசில் மாணவர்களுக்கு நூல்கள் வழங்கி கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் கல்விகற்ற எமில் றொசிங்ரன் மன்னார் மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டதைக் கௌரவிக்கும் முகமாக புலம் பெயர் ஒன்றியம் விடத்தல்தீவு என்ற அமைப்பினால் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இவ் அமைப்பினால் விடத்தல்தீவு மன்தூய யோசவ்வாஸ் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் புலமைப்பரிசில் மாணவர்களுக்கு புத்தகங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக எமது கிராமத்தைச் சேர்ந்தவரும், பேசாலை பத்திமா மகா வித்தியாலயத்தின் அதிபருமான அருட்சசோதரர் ஸ்ரனிஸ்லஸ் மற்றும் பங்குத்தந்தை செல்வநாதன் பீரிஸ். அருட்சகோதரி சலோமி, ஒன்றிய இணைப்பாளர் வைத்திய கலாநிதி ம.மதுரநாயகம், பாடசாலை அதிபர் தேவராஜன், எமில் றொசிங்ரன் அவரது பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் புலமைப் பரிசில் மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டதுடன் மருத்துவத்துறைக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவனுக்கு ஒன்றியத்தினால் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மயக்கத்துடன் ஆலயத்துக்கு கொண்டுவந்த பெண் வேப்பிலையின் மகிமையால் விழித்தெழுந்தார்

## பேச்சியம்மன் ஆலயத்தில் அதிசயம்

(திருநெல்வேலி)

மயக்கமுற்ற நிலையில் ஆலயமொன்றுக்கு உறவினர்களினால் தூக்கி வரப்பட்ட இளம்பெண்ணொருவர் சில நிமிடங்களில் மயக்கம் தெளிந்து உறவினர்களுடன் அளவளாவிய அதிசய சம்பவமொன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் வான் ஒன்றில் சுமார் 10 பேர் நெடுங்கேணியிலிருந்து கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் உள்ள பேச்சியம்மன் என அழைக்கப்படும் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் கோவிலுக்கு வந்தனர். வானிலிருந்து இறங்கியவர்கள் ஆண்கள் பெண்களாக சேர்ந்து இளம் பெண் ஒருவரைத் தூக்கி வந்து ஆலய மண்டபத்தில் கிடத்தினர்.

அவ்விடத்தில் நின்ற இளைஞர்கள் சிலர் அவர்களை அனுகி விசாரித்தனர். இளம் பெண்ணின் தாயார் அவர்களுக்கு விடயத்தை விளக்கிக் கூறினார். தாங்கள் முன்னர் கல்வியங்காட்டில் வசித்ததாகவும், சில காலம் பிள்ளை இல்லாமல் இருந்து கோவிலில் நேர்த்தி வைத்து அப்பெண் பிள்ளை பிறந்ததாகவும் சில மாதங்களுக்கு முன்னர் பெண்ணுக்குக் கல்யாணமானதாகவும் கல்யாணமாகி சில நாடகளில் இப்படி அடிக்கடி மயக்கம் போட்டு விழுந்து விடுவதாகவும் தாயார் குறிப்பிட்டார்.

அங்கு நின்ற இளைஞர்களில் ஒருவர் உடனடியாக கோவிலுககுப் பின்புறமாக நின்ற வேப்பமரம் ஒன்றிலிருந்து சில வேப்பிலைகளைப் பறித்து வந்து அந்தப் பெண்ணின் வாய்க்குள் திணித்தார். சில நிமிடங்கள் கழிந்த பின்னர் பெண்ணின் உடலில் சிறிது அசைவு ஏற்பட்டது. இருந்தவர்கள் கற்பூரம் கொழுத்தி வழிபாடு செய்து தேங்காய் உடைத்து அதிலிருந்து கிடைத்த இளநீரைப் பெண்ணின வாய்க்குள் ஊற்றினர். சில நிமிடங்களில் அதிசயிக்கத்தக்க முறையில் மயக்கம் தெளிந்து எழுந்த அப்பெண் உறவினர்களுடன் சர்வசாதாரணமாக உரையாடினார்.

தன்னை இக் கோவிலுக்கு அழைத்துச் செல்லுமாறு அவ் இளம் பெண் கேட்டுக் கொண்டதாலேயே இங்கு அவரையும் அழைத்துக்கொண்டு தாங்கள் அனைவரும் நெடுங்கேணியிலிருந்து புறப்பட்டு வந்ததாகப் பெண்ணின் தயார் தெரிவித்துள்ளார். தற்போது எந்தவித மயக்கமுமின்றி இப்பெண் தனது கணவருடன் சுகமாக வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (137)

# முத்துமாரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்

காரைநகர் திருவருள்மிகு மணற்காடு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 9.35 மணி முதல் 10.45 மணிவரை சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதில் ஆரம்பகிரியைகள் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன் 30 ஆம் திகதி காலை 8 மணிமுதல் முதலாம் திகதி மாலை 5 மணி வரை அடியார்களின் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறும்.

தொடர்ந்து 30 தினங்கள் மண்டலாபிஷேகம் நிடைபெற்று மார்ச் மாதம் 3 ஆம் திகதி ம்ணடலாபிஷேகம் பூர்த்தியான்று 1008 கலவாபிஷேகம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆலய மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக தினத்தன்று இலங்கையில் தலைசிறந்த தவில் நாதஸ்வர வித்துவான்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன் விசேடமாக யானை, குதிரை, இபம் என்பனவும் கிரியைகளில் இடம் பெறவுள்ளன. தொடர்ந்து கும்பாபிஷேக தினத்தன்று மாலை அம்பாள் பூந்தண்டிகையில் வீதியுலா வந்த பின்பு பரதநாட்டிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

எப்போதும் அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல் - டெஸ்கார்டஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## வாய்ப்பை மீண்டும் தவறவிடாதீர்கள்!

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவியேற்பு வைபவத்தின்போது ஆற்றிய உரையில் தனது வெற்றிக்குக் காரணமாக இருந்த எல்லாருக்கும் நன்றி கூறிவந்தபோது தமிழ்த் தரப்பின் தலைவர் எவருக்கும் நன்றி கூறாமல் அலட்சியமாக விட்டுவிட்டது குறித்து முதல் சர்ச்சை வெடித்திருக்கிறது.

தனது நன்றி தெரிவிப்பில் ரணில் விக்கிரமசிங்க, சரத் பொன்சேகா, சந்திரிகா குமாரதுங்க, சம்பிக்க ரணவக்க, ரவூப் ஹக்கீம், ரிசாட் பதியுதீன் போன்றவர்களின் பெயர்களை எல்லாம் குறிப்பிட்ட புதிய ஜனாதிபதிக்கு ஏன் சம்பந்தன், மனோ கணேசன், திகாம்பரம் ஆகியோர் நினைவுக்கு வரவில்லை என்று கேட்டுக் கொதிப்படைந்திருக்கிறார் மனோ கணேசன்.

அதுமட்டுமல்ல, தமிழர்களைப் புறக்கணிப்பதுதான் தென்னிலங்கை அரசியற் தரப்புகளின் பரவணிப் பழக்கம் என்றும், வெற்றியைத் தேடித்தந்த தமிழர்களை நீங்கள் அதிகாரத்துக்கு வந்த உடனேயே தள்ளிவைத்து விட்டீர்கள் என்றும் கோபப்பட்டிருக்கிறார்.

மனோ கணேசனுக்குத் தெரியவேண்டியது, தென்னிலங்கை அரசியற் தரப்புக்களின் பரவணிப் பழக்கம் தமிழர்களை மறந்து விடுவதாக இருக்கலாம் அதுபோல இந்தத் தமிழ்த் தரப்புகளின் பரவணிப் பழக்கமும் ஒன்றிருக்கிறது.

தேர்தல் என்று வரும்போது தென்னிலங்கை எதிர்த் தரப்புகளுடன் இணைந்து நின்று அப்போது அரசில் இருப்பவர்களை எதிர்த்துப் பேசி தமிழ் வாக்குகளை அள்ளுவது. அந்த எதிர்த் தரப்பு வென்று ஆட்சிக்கு வந்துவிட்டால், அடுத்த தேர்தலின் போது அதை எதிர்த்துக்கொண்டு பிறகு அன்றைக்கு எதிர்த்தரப்பாய் இருப்பவர்களுடன் போய் நிற்பது.

இணையதளத்தில் தமிழ் எழுத்தாளர் ஒருவர், தேர்தலுக்கு முன்புவரை மகிந்த ராஜபக்ஷதான் தமிழர்களுடைய எதிரி அவருக்கு எதிராக ஒற்றுமையாக வாக்களித்து தமிழர்கள் அவரை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று எழுதி வந்தார்.

தேர்தல் முடிந்து மைத்திரி ஜனாதிபதியாக வந்தவுடன் அந்த எழுத்தாளர், "இன்றிலிருந்து இனவாத பௌத்த அரசின் தலைவராக மைத்திரிபால பொறுப்பேற்பதால் அவருக்கான எனது ஆதரவு முடிகிறது. இனி அவர்தான் தமிழர்களின் எதிரி" என்று எழுதுகிறார்.

இந்த விளையாட்டைத்தான் தமிழ் மக்களும் நம்பி ஒவ்வொரு தேர்தலிலும் அதிகாரத்திலிருக்கும் தலைவருக்கு எதிராகத் தங்கள் வாக்குகளை அளித்துத் திருப்தியடைந்து வருகிறார்கள்.

புலம்பெயர்ந்து வேறு நாடொன்றில் வாழும் அந்த எழுத்தாளருக்கு வேண்டுமானால், இப்படி அவ்வப்போது அதிகாரத்தில் இருக்கும் தலைவர்களை தோற்கப்பண்ணி வீட்டுக்கு அனுப்பி வைத்துக்கொண்டிருக்கும் விளையாட்டு ஒன்றே போதுமானதாக இருக்கலாம்.

ஆனால் இங்கு வாழும் தமிழ் மக்கள் தங்கள் அரசியலை இப்படி விளையாட்டுத் திருப்திக்காக செய்துகொண்டிருக்க முடியாது. இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களாகிய நாம் எமது அரசியலுரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு சிங்கள, முஸ்லிம் மக்களுடன்தான் அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு அந்த மக்களின் பெரும்பான்மை ஆதரவோடு பதவிக்கு வரும் தலைவர்களுடன்தான் பேசி அதிகாரப் பகிர்வில் இணக்கத்திற்கு வரவேண்டுமே தவிர, எப்போதுமே எதிர்த்தரப்பில் ஓடியோடி நின்றுகொண்டு இங்கு எந்தத் தீர்வையும் கொண்டு வர முடியாது.

இப்போது தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தான் ஆதரித்து வெற்றிபெற்ற புதிய ஜனாதிபதியுடன் பேசி தீர்வைக் காணவேண்டுமே தவிர, இவரும் சரியில்லை என்று சொல்லிவிட்டு, அடுத்த தேர்தலில் எதிர்த்தரப்புக்கு ஓடிவிடக் கூடாது. - ஆசிரியர்

# வெற்றியில் முக்கிய பங்கு தமிழ் பேசும் மக்களுக்கே

## – ஜே.வி.பி. கூறுகிறது –

பொது எதிரணியின் வெற்றியில் மறை முகமான பங்கு எமக்கு உள்ளது எனினும் பொது எதிரணியில் உறவு வைத்துக் கொள்ளவோ வெற்றியில் பங்கு கேட்கவோ விரும்பவில்லை நாம சுயாதீனமாக செயற்பட ஆசைப்படுகின்றோம் என தெரிவிக்கும் ஜே.வி.பி.யின் தலைவர் அனுர குமார திசாநாயக்க, ஜனாதிபதி மைத்திரிபாலவின் வெற்றியில் முக்கிய பங்கு தமிழ் பேசும் மக்களுக்கே உள்ளது. வெற்றியை தீர்மானித்த சக்தி அவர்களெனவும் குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பின் பின்னர் கட்சியின் தலைவரிடம் தேர்தல் வெற்றி தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மைத்திரிபால சிறிசேனவின் பொது எதிரணியின் நேரடி பங்குதாரராக நாம் இருக்கவில்லை. எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சியினை கவிழ்க்க எமது முழுமையான பங்கினையும் வழங்கினோம். இதை பொது எதிரணி பல மேடைகளில் சொல்லியுள்ளது.

இப்போது நாம் பொது எதிரணியின் வெற்றியில் பங்குதாரராக உரிமை கொண்டாடுவதை விடவும நல்லாட்சிக்கான அழுத்தம் கொடுக்கவே தயாராகியுளளோம். தேசிய அரசில் பங்கு கொள்வது தொடர்பில் நாம் இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை.

அதே போல் தற்போது நாட்டில் ஜனநாயகத்திற்கான பாதை திறந்துள்ளது. மக்கள் மாற்றத்தினை விரும்பி ஆர்வத்துடன் வாக்களித்துள்ளனர். இது இலங்கையின் மாற்றத்திற்கான வரலாற்றின் மைல்கல்.

மேலும் இம்முறை தேர்தலில் பொது எதிரணியின் வெற்றியினைத் தீர்மானித்ததில் தமிழ் பேசும் மக்களின் பங்கு அதிகமானது. வடக்கு கிழக்கின் வாக்குகளே பொது எதிரணியின் வெற்றியில் முக்கிய பங்கினை எடுத்துள்ளது.

அதே போல் சிங்கள மக்கள் இரு சாராருக்கும் சம பங்கு வாக்குகளை வழங்கியிருக்கின்றனர். அதேபோல் 2005 ஆம் ஆண்டில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் தடுக்கப்பட்டமையும் 2010 ஆம் ஆண்டில் 18 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் ஜனாதிபதி வெற்றி பெற்றமையும் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியினை தற்பெருமை கொண்ட ஆட்சியாக மாற்றி விட்டது.

இம்முறை வெற்றி இரு சாராருக்கும் நல்ல படிப்பினையாக அமைந்துள்ளது. இனி வரும் காலங்களில் மக்கள்தான் தீர்மானிக்கும் பிரதான சக்தியாக விளங்குவார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## மைத்திரியுடன் ஒத்துழைப்போம் தினேஸ்குணவர்த்தன தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கொள்கைகளுக்கு ஆதரவளிக்கப் போவதாக தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ்குணவர்த்தன இதனைத தெரிவித்துள்ளார்- 100 நாட்களுக்குள் அரசமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவரும் ஜனாதிபதியின் கொள்கைக்கு ஆதரவளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்றுள்ள கட்சி என்ற வகையில் நாங்கள் ஜனாதிபதியின் 100நாள் திட்டத்திற்கு ஆதரவளிப்போம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மைத்திரிக்கு ஆஸி.வாழ்த்து

(கொழும்பு)

இலங்கையின் ஆறாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள மைத்திரிபால சிறிசேனவுக்கு அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டுள்ளார்.

ஒழுங்கான மாற்றத்துக்கான முடிவுகொண்டோரின் முடிவுகளின் அடிப்படையிலான பெறுபேறுகளை ஏற்று வெளியேறியுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி, ஜனநாயக சீர்திருத்தி, நல்லாட்சியை ஏற்படுத்துவது மட்டுமன்றி ஊழல் எதிர்ப்புக்காக தனது ஆணையை செயல்படுத்துவார் என்று அவுஸ்ரேலிய அரசாங்கம் விரும்புகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். என கொழும்பிலுள்ள அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

## நூறுநாள் திட்டத்தை ஒருபோதும் குழப்பமாட்டோம்

### நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தை ஒருபோதும சீர்குலைக்கமாட்டோம் என்றும் அந்த திட்டத்தை மேம்படுத்துவதற்கும் சீர்த்திருத்தத்துடன் முன்னெடுப்பதற்கும் நாம் ஒத்துழைப்பு நல்குவோம் என்று முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## டட்லி ராஜபக்ச பாங்கொக் பயணம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இளைய சகோதரரான டட்லி ராஜபக்ஷ நேற்று அதிகாலை பாங்கொக் பயணமானார்.

அமெரிக்க பிரஜையான அவர், ஜனாதிபதி தேர்தலுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் நாட்டுக்கு வந்தார். அதன் பின்னர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலைய வளாகத்திலுள்ள அதிசொகுசு அறையில் நான்கு நாட்கள் தங்கியிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர், தாய் விமான சேவைக்கு சொந்தமான டி.ஜி.308 என்ற விமானத்திலேயே இன்று அதிகாலை 1.30இற்கு நாட்டைவிட்டு புறப்பட்டு சென்று விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## அநுரசிறிவர்த்தன வெளிநாடு பயணம்

(கொழும்பு)

சுயாதீன தொலைக்காட்சியின் (ஐ.டி.என்) தலைவர் அநுர சிறிவர்த்ன, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக சிங்கப்பூருக்கு பயணமாகியுள்ளார். இலங்கை விமானசேவைக்கு சொந்தமான விமானத்திலேயே அவர் சிங்கபூருக்கு சென்றுவிட்டதாக உத்தியோக பூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பி.பீ.அபயக்கோன் ஜனாதிபதியின் செயலாளர்

(கொழும்பு)

புதிய ஜனாதிபதியின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் மூத்த உறுப்பினரும் பொதுநிர்வாக அமைச்சின் முன்னாள் செயலாளருமான பி-.பீ.அபயக்கோன், நியமிக்கப்பட்டுள்ளார்.

# மாகாண சபையை இனியாவது கூட்டமைப்பு செயற்படுத்துமா?

சங்கர சிவன்

**தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் 2015 இல் தீர்வு நிச்சயமென்றால் அது மகிழ்ச்சியான செய்தி. சர்வதேச சமூகம் தீர்வுத் திட்டத்துடன் தயாராக இருக்கின்றது என்றும் இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கப்போகின்றது என்றும் காலத்துக்குக் காலம் சம்பந்தன் போட்ட வெற்று வெடிகளைப் போல இதுவும் அமைந்துவிடக் கூடாது.**

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன 51 வீதம் வாக்குகள் பெற்று வெற்றியீட்டியிருக்கின்றார். மகிந்த ராஜபக்ஷ தோல்வியை ஏற்றுக்கொண்டு அலரி மாளிகையிலிருந்து வெளியேறிவிட்டார். இப்போது பதவியேற்றுள்ள மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதி அளித்த விடயங்களுக்கு மாத்திர மன்றி வேறு விடயங்களுக்கும் முன்னுரிமை அளித்துச் செயற்படவேண்டியவராக உள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதும் பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்குவதும் அவர் அளித்த வாக்குறுதிகளுள் முக்கியமானவை. இவற்றைத் தவிர சிறுபான்மையினருடைய பிரச்சினைகளின் தீர்வுக்கும் அவர் முன்னுரிமை அளிக்க வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் வாக்களிப்பு முறையை ஆராய்ந்து பார்க்கையில் சிறுபான்மையினர் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களிலேயே அவருக்குக் கூடுதலான வாக்குகள் கிடைத்திருப்பதைக் காணலாம். இன்னொரு விதமாகக் கூறுவதானால் சிறுபான்மையினரின் வாக்குகளே அவரை ஜனாதிபதியின் கதிரைக்குக் கொண்டு வந்திருக்கின்றன. தேர்தல் விஞ்ஞாபனத்திலோ தேர்தல் பிரசாரத்தின்போதோ சிறு பான்மையினரின் பிரச்சினை களுக்கான தீர்வை மைத்திரிபால முன்வைக்கவில்லை எனினும் சிறு பான்மையினரின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்துத் தீர்வுகாண வேண்டிய தார்மீகப் பொறுப்பு அவருக்கு இருக்கின்றது.

இவ்விடயத்தில் கூட்டமைப்பு வகிக்க வேண்டிய பாத்திரம் முக்கியமானது. இவ்வளவு காலமும் கூட்டமைப்புத் தலைவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வில் கவனம் செலுத்தவில்லை. இனப் பிரச்சினைக்கான தீர்வை இவர்கள் விரும்பவில்லை என்ற பொதுவான குற்றச்சாட்டு இவர்களுக்கு எதிராக இருக்கின்றது.

அந்தக் குற்றச்சாட்டிலிருந்து தங்களை விடுவிப்பதற்காக சர்வதேச சமூகம் இலங்கையின் இனப்பிரச்சினையில் அக்கறை கொள்கின்றது என்றும் அது தீர்வைப் பெற்றுத்தரும் என்றும் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்த்தார்கள். இந்த நம்பிக்கையை வலுவூட்டும் வகையில் மேற்கத்திய நாடுகளும் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான சில நகர்வுகளை மேற்கொண்டன.

மேற்கத்திய நாடுகளின் அணுகுமுறை தொடர்ந்தும் இவ்வாறாகவே இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளோ இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களோ மேற்கத்திய நாடுகளின் உண்மையான அக்கறையாக இருக்கவில்லை.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தைத் தங்கள் மூலோபாய எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்றவாறு வளைத்தெடுப்பதும் அது சாத்தியமாகாவிட்டால் தங்களுக்குச் சாதகமான ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்துவதுமே மேற்கத்திய நாடுகளின் உண்மையான நோக்கமாக இருந்தது. தங்களுக்குச் சாதகமான ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதில் மேற்கத்திய நாடுகள் இப்போது வெற்றியீட்டியிருக்கின்றன.

இனிமேல் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றியோ மனித உரிமை மீறல்கள் பற்றியோ அவை அக்கறை கொள்ளப்போவதில்லை. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று இனிமேல் கூட்டமைப்புத் தலைவர்களால் கூறமுடியாது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நடைமுறைச் சாத்தியமான முயற்சியை இனிமேல் அவர்களால் தட்டிக்கழிக்க முடியாது.

மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதென்ற முடிவை அறிவித்த ஊடகவியலாளர் மகாநாட்டில் அந்த முடிவை மேற்கொள்வதற்கு அடிப்படையான இரண்டு முக்கிய விடயங்களைச் சம்பந்தன் கூறினார். சந்திரிகா தனக்கு அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலேயே கூட்டமைப்பு இந்த முடிவை எடுத்ததென்பது ஒன்று. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு 2015 இல் தீர்வு நிச்சயம் என்பது மற்றொன்று.

சந்திரிகா அளித்த வாக்குறுதியைக் கூட்டமைப்பு மூடுமந்திரமாகவே வைத்திருக்கின்றது. தேர்தல் முடிந்த பின்னராவது அதை மக்களுக்குத் தெரியப்படுத்தலாமே. மக்களின் பிரச்சினைகளுக்கு மக்கள் அறியாத தீர்வா? சந்திரிகா என்ன வாக்குறுதிகள் அளித்தார் என்பதையும் அவற்றுடன் எந்தெந்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றுகின்றது. என்பதையும் மக்கள் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். இல்லையென்றால் சம்பந்தன் புலுடா விடுகின்றார். என்று தான் சொல்ல வேண்டும். இனப்பிரச்சினையின் தீர்வுக்காக மஹிந்தவின் அரசாங்கத்திடம் ஒரு தீர்வுத்திட்டத்தைச் சமர்ப்பித்திருப்பதாக கொஞ்சக்காலம் கூறினார்கள். அந்தத் தீர்வுத்திட்டம் பற்றிய எந்த விபரத்தையும் தமிழ் மக்களுக்குச் சொல்லவில்லை.

இன்று வரை தமிழ் மக்களுக்கு அதைப்பற்றி எதுவும் தெரியாது. நன்றாக யோசித்துப் பார்த்தால் அது புலுடா என்பது விளங்கும். அரசாங்கத்திடம் தீர்வுத்திட்டத்தைச் சமர்ப்பித்திருப்பதாகக் கூறிய அதே தலைவர்கள் தான் சந்திரிக்காவின்



அதிகாரப்பகிர்வு ஆலோசனைகளின் அடிப்படையில் அரசாங்கம் ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கூறிவந்தார்கள். ஏற்கனவே தீர்வுத்திட்டத்தைச் சமர்ப்பித்திருந்தால் அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. சந்திரிக்கா உண்மை யாகவே ஏதாவது வாக்குறுதி அளித்திருந்தால் கூட்டமைப்புத் தலைமை தமிழ் மக்களுக்கு அதைத் தெரியப்படுத்த வேண்டும்.

தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் 2015 இல் தீர்வு நிச்சயமென்றால் அது மகிழ்ச்சியான செய்தி. சர்வதேச சமூகம் தீர்வுத் திட்டத்துடன் தயாராக இருக்கின்றது என்றும் இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கப்போகின்றது என்றும் காலத்துக்குக் காலம் சம்பந்தன் போட்ட வெற்று வெடிகளைப் போல இதுவும் அமைந்துவிடக் கூடாது.

சம்பந்தன் என்ன அடிப்படையில் 2015 இல் தீர்வு நிச்சயம் என்று சொன்னாரோ தெரியவில்லை. இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வை அவ்வளவு சீக்கிரத்தில் அடையக் கூடியதாக நாட்டின் இன்றைய சூழ்நிலை இல்லை. கட்டங்கட்டமாகவே முழுமையான தீர்வை அடைய முடியும். மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்று கட்டங்கட்டமாக மேலதிக அதிகாரங்களைப் பெறுவதன் மூலம் தான் முழுமையான அரசியல் தீர்வை அடைய முடியும். மாகாண சபைக்குரிய அதிகாரங்களை மகிந்தவின் அரசாங்கம் வழங்கவில்லை என்று கூட்டமைப்பு கூறி வந்தது.


இப்போது அந்தச் சாட்டைச் சொல்ல முடியாது. பதவியில் இருப்பது இவர்களின் அரசாங்கம். தேவையான அதிகாரங்களைப் பெற்று மாகாண சபையைச் செயற்படுத்துவதன் மூலம் அரசியல் தீர்வுக்கான நகர்வைக் கூட்டமைப்பு ஆரம்பிக்குமா?



**சம்பந்தன் என்ன அடிப்படையில் 2015 இல் தீர்வு நிச்சயம் என்று சொன்னாரோ தெரியவில்லை. இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வை அவ்வளவு சீக்கிரத்தில் அடையக் கூடியதாக நாட்டின் இன்றைய சூழ்நிலை இல்லை. கட்டங்கட்டமாகவே முழுமையான தீர்வை அடைய முடியும். மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்று கட்டங்கட்டமாக மேலதிக அதிகாரங்களைப் பெறுவதன் மூலம் தான் முழுமையான அரசியல் தீர்வை அடைய முடியும். மாகாண சபைக்குரிய அதிகாரங்களை மகிந்தவின் அரசாங்கம் வழங்கவில்லை என்று கூட்டமைப்பு கூறிவந்தது. இப்போது அந்தச் சாட்டைச் சொல்ல முடியாது. பதவியில் இருப்பது இவர்களின் அரசாங்கம். தேவையான அதிகாரங்களைப் பெற்று மாகாண சபையைச் செயற்படுத்துவதன் மூலம் அரசியல் தீர்வுக்கான நகர்வை கூட்டமைப்பு ஆரம்பிக்குமா?**

# குற்றச்செயல்களுக்கு தண்டனை மைத்திரியுடன் ஒத்துழைக்க தயார்

## பான் கீ மூன் அறிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்படத் தயார் என ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

வெற்றிகரமான முறையில் ஜனாதிபதி தேர்தலை நடத்தி முடித்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் நம்பகமான முறையில் தொழில்சார் நியதிகளை பின்பற்றி இலங்கை தேர்தல் செயலகம் தேர்தலை நடத்திய விதம் பாராட்டுக்குரியது என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஏனைய வேட்பாளர்கள் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் தரப்பினர் உள்ளிட்டவர்களின் முயற்சிகள் பாராட்டுக்குரியவை என அவர் குறிப்பிட் டுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் அபிவிருத்தி ஆகியனவற்றுக்கு பூரணமான ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் பான் கீ மூன் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்படத் தயார் எனவும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

# மனித உரிமை பாதுகாப்புக்கு அதிக கவனம் தேவை

## இது மன்னிப்புச்சபையின் கோரிக்கை

(கொழும்பு)

புதிய அரசாங்கம் மனித உரிமை, பாதுகாப்பு விவகாரங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த கால அரசாங்கங்களின் மனித உரிமை பிரச்சினைகள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உடனடி கவனம் செலுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமைகளை நிலைநாட்ட சிறந்த சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இந்த சந்தர்ப்பம் விரயமாக்கப்படக்கூடாது எனவும் சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியாவிற்கான பிரதம அதிகாரி ஆனந்தபத்மநாதன் தெரிவித்துள்ளார்.

18 ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்தல், நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்தல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பில் உரிய விசாரணை நடத்தி குற்றச் செயல்களுக்கு தணடனை விதிக்கப்படாத நிலைமை இலங்கையில் தசாப்த காலமாக நீடித்து வருவதாகவும் இந்த கலாச்சாரத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஜனநாயகத்துக்கான ஆதரவு அதிகரிப்பு மைத்திரிக்கு ஒபாமா வாழ்த்து



(கொழும்பு)

இலங்கையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் முக்கியத்துவத்துக்கு அப்பால் உலகம் முழுவதும் ஜனநாயகத்திற்கான ஆதரவு - நம்பிக்கையாகவும் உள்ளது என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

இலங்கையின் 7 ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்ற மைத்திரிபால சிறிசேனவுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இதன்போது வெற்றிகரமான - அமைதியான தேர்தலை நடத்தியமைக்காக இலங்கை மக்களுக்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்தார்.

# ஐ.நா.வுடன் ஒத்துழையுங்கள் மைத்திரியிடம் கமரூன் கோரிக்கை



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் குறித்த ஐ.நாவின் சர்வதேச விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கையின் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கேட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவான மைத்திரிபால சிறிசேன வின் வெற்றியைப் பாராட்டி அவர் விடுத்த வாழ்த்துச் செய்தியிலேயே இதனை குறிப்பிட்டிருக்கிறார். அவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேனவை நான் வாழ்த் துகிறேன். நான் அந்த நாட்டிற்கு விஜயம் செய்த வேளை அந்த நாட்டில் பெரும் சக்தி உள்ளதை உணர்ந்தேன். அவர் அந்த சக்தியை பயன்படுத்தி ஐக்கியப்பட்ட வளமான - ஸ்திரத்தன்மை வாய்ந்த நாட்டை தலைமை தாங்குவதற்கு நான் வாழ்த்துகிறேன். அமைதியான ஜனநாயகத் தேர்தல் என்பது அதில் தொடர்புபட்டுள்ள அனைத்து இலங்கையர்களினதும் பெருமைக்குரிய விடயம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மக்களின் முடிவை ஏற்று அமைதியான ஆட்சி மாற்றத்திற்கு இணங்கின்மையையும் நான் வரவேற்கிறேன்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் குறித்து ஐ.நாவின் மனித உரிமைகள் கவுன்ஸில் முன்னெடுத்துள்ள விசாரணைகளுக்கு ஒத்துழைக்குமாறு புதிய ஜனாதிபதியை நான் கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் கடந்த கால விவகாரங்களுக்கு இதன் மூலம் தீர்வைக்கண்ட பின்னர் நாடு முன்னோக்கி நகரலாம் எனவு தெரிவித்துள்ளார்.

# பதவி விலகினால் போதாது பதிலளித்தே ஆகவேண்டும்

(கொழும்பு)


மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஸ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கப்ராலின் பதவிக் காலத்தில் இடம்பெற்ற முறைகேடுகளுக்கு பதிலளித்து அதன் பின்னரே பதவி விலகியிருக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த நான்கு ஆண்டுகளாக எதிர்க்கட்சிகள் மக்களுக்காக போராடி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் சுமத்தி வரும் பிரதான குற்றச்சாட்டுக்களில் மத்திய வங்கி ஆளுநரின் செயற்பாடுகள் குறித்தும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கியின் பல்வேறு கொடுக்கல் வாங்கல்கள், பங்குச சந்தை கொடுக்கல் வாங்கல்கள், குறிப்பாக ஊழியர் சேமலாப நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் காணப்படுவதாகவும் இவை தொடர்பில் பதிலளிக்காது, வெறுமனே மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை ராஜினாமா செய்வது உசிதமானதல்ல எனவும அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியத் தூதுவர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சின்ஹா இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்த சந்திப்பில், இந்திய அரசாங்கத்தின் வாழ்த்துக்களை ஜனாதிபதிக்கு சின்ஹா சமர்ப்பித்ததாக இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயம் குறிபபிட்டுள்ளது.

இதன்படி ஜனாதிபதியாக நேற்றுமுன்தினம் பதவி ஏற்றபின் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்த முதல் வெளிநாட்டு பிரதிநிதி சின்ஹா என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதியமைச்சர் பிரேம்லால் கைது



(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் பிரதியமைச்சர் பிரேம்லால் ஜெயசேகர கைது செய்யப்பட்டார்.

கடந்த 5 ஆம் திகதி நிவிட்டிகலவில் இடமபெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் சாந்த டொடன்கொட என்பவர் உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றம் விடுத்த உத்தரவுக்கமையவே பிரதியமைச்சர் பிரேம்லால் ஜெயசேகர கைது செய்யப்பட்டார்.

## ஐ.தே.க. ஆதரவாளரின் வீடு மீது கல்வீச்சு

புத்தளம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டின் மீது கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 03.00 மணியளவில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் குறித்த வீட்டின் இரண்டு அறைகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் சம்பவத்துடன் தொடரபுடைய மூன்று சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, அவர்களைக் கைதுசெயவதற்கான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆடம்பரமற்ற நிகழ்வு 6000 ரூபா மட்டும் செலவு

(கொழும்பு)

நாட்டின் ஏழாவது ஜனாதிபதியும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆறாவது ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் வைத்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பதவிப்பிரமாணம் செய்துக்கொண்டார்.

அந்த பதவிப்பிரமாண வைபவத்துக்காக 6,000 ரூபாய் மட்டுமே செலவு செய்யப்பட்டதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

புதிய ஜனாதிபதியை வரவேற்பதற்காக பூக்கொத்து வாங்குவதற்கு சிறுதொகையும் சுதந்திர சதுக்கத்துக்கான மின்சார கட்டணமும் செலுத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# பேராசிரியர் சண்முகதாஸிற்கு கனடாவில் பவளவிழா

(யாழ்ப்பாணம்)

கனடாவில் பெரிய சிவன் கோவிலில் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைககழக தகைசார் வாழ்நாள் பேராசிரியரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவருமாகிய பேராசிரியர் அசண்முகதாஸ் அகவை எழுபத்தைந்து எய்தியமையிட்டான பவளவிழா இடம் பெறவுள்ளது.

வண.பேராசிரியர் ஏ.ஜெ.வி. சந்திரகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தமிழில் மொழிபெயர்த்த யப்பானியக் காதல பாடல்கள் என்ற நூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை தும்பளை மற்றும் திருகோணமலை நலன் புரிச் சங்கங்கள் இணைந்து மேற்கொண்டுள்ளன. (63)

# துணுக்காயில் 8151 மாணவர்களுக்கு சீருடைத்துணிகள் வழங்கப்பட்டுள்ளன

## - வலயக்கல்விப்பணிப்பாளர் மாலினி தெரிவிப்பு -

(துணுக்காய்)

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட 8151 மாணவர்களுக்கு இலவச பாடநூல்களும் சீருடைத்துணிகளும் வழங்கப்பட்டுள்ளதாக முல்லை - துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. எஸ்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள் ளார்.

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள 61 பாடசாலைகளிலும் 8611 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இந்த நிலையில் .8151 மாணவர்களுக்கும் பாடநூல்களும், சீருடைத்துணிகளும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் ஒட்டுச்சுட்டான் கல்விக்கோட்டத்தின் கீழ் 4229 மாணவர்க ளும், துணுக்காய் கல்விக்கோட்டத்தின் கீழ் 2,567 மாணவர்களும் மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்தின் கீழ் 1815 மாணவர்களும் கல்வி பயின்று வருவது குறிப்பிடத்தக்கது


## காரைநகர் பல.நோ.கூ.சங்கம்(வ-து)

### பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவிவெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**1. பதவி :- கணக்காளர்**

சம்பள குறியீட்டு இல :- 104 / 9

சம்பள அளவுத்திட்டம் :- 66 / 2006க்கமைய
10900 - 130x10 - 140x10 - 13650

**தகைமை**

அ. கூட்டுறவு சங்க ஊழியர் 10ஆம் சம்பள அளவுத்திட்டத்தில் கணக்காளர்/ உள்ளக கணக்குப் பரிசோதகர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 11ஆவது சம்பள அளவுத் திட்டத்தில் உள்ளகக் கணக்குப் பரிசோதகர் / கணக்குப் பதிவாளர் / கணக்கு அல்லது கணக்குப்பரிசோதகர் அலுவல்கள் சம்மந்தமாய எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

ஆ. ஐக்கிய இராச்சிய கணக்குப் பதவியாளர் நிறுவனம் இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்மந்தமாய் மேற்பார்வை மட்டப் பதவியில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி / கூட்டுறவுத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி, அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டுகால அனுபவம் அல்லது க.பொ.த உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட (03) மூன்று பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது (05) ஐந்து வருடகால அனுபவம்

**2. பதவி :- பயிற்சி கிளைமுகாமையாளர்**

**தகைமை :-**

க.பொ.தசாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்

- கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்றுநிருபப்படி ஆணைக்குழுவால் அங்ககீகரிக்கப்பட்ட இதரபடிகளும் வழங்கப்படும்
- வயதெல்லை 18 - 45 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது) கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது கடமையாற்றுபவர்களாயின் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்படிவத்தினை தலைமை அலுவலகத்தில் ரூபா 20.00 செலுத்திப் பெற்றுக்கொள்ளவும். விண்ணப்படிவத்துடன் தகைமை தொடர்பான விபரங்களும் இணைக்கப்பட்டுள்ளன.
- தெரிவு செய்யப்படுபவர் கூட்டுறவுச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய பிணைப் பணம் செலுத்த வேண்டும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், அனுபவச்சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு விண்ணப்பங்கள் யாவும் 31.01.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பொது முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், காரைநகர் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தபால் உறையின் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டிலக்கம் தவறாது குறிப்பிடல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றிய பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பொதுமுகாமையாளர்,**

**பல.நோ.கூ.சங்கம் (வ-து)**

**காரைநகர்.**

C / 3984


# உள்ளூர் சேவை தொடர்பாக வடக்கு - கிழக்கில் விபரம் திரட்டு

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் கடந்த மூன்று வருடங்கள் முன்னெடுக்கப்பட்ட வடக்கு - கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தும் திட்டம் தொடர்பான வேலைகளின் முழுவிபரம் திரட்டப்பட்டு வருகின்றது.

உட்கட்டுமானத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வீதிகள், சந்தைகள், பாலங்கள், கொல்களங்கள், மண்டபங்கள் மற்றும் உட்கட்டுமான விபரங்களே இவ்வாறு திரட்டப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் மேற்படி விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இவ்வாறு விபரங்கள் முழுமையாக திரட்டப்பட்டவுடன் அரசின் தலைமை கணக்காய்வு பகுதியூடாக கணக்காய்வுகள் செய்யப்படவுள்ளன.

இதன் மூலம் வடமாகாணத்தில் 33 சபைகளின் வடக்கு - கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட திட்டத்தின் முழுமையான பகுப்பாய்வு வெளிக்கொணரப்பட்டு மக்களுக்கு காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இவ்வாறாக வடக்கு மாகாணத்தில் சகல முன்னேற்ற மீளாய்வு பணிகள் படிப் படியாக முன்னெடுக்கப்படவுள்ளதாக வடக்கு உள்ளூராட்சி அமைச்சின் செய்திகள் தெரிவிக்கின்றன. (92)



கைதடி அரசமுதியோர் இல்லத்தில் பல வருடங்களாக தங்கி வாழும் ஒரு தாயையும், மகளையும் படத்தில் காணலாம். (137)

# முரசின் இன்றைய பலன்

(11.01.2015 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் மார்கழி மாதம் 27ஆம் திகதி.
ஷஷ்டி / அமிர்தம்.
உத்தர நட்சத்திரம் முன்னிரவு 11.54 வரை. பின் அத்தம்.
இராகு காலம 5.03 - 6.33 வரை. சுபநேரம 9.33 - 11.03 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
நாவைக்காத்து இனிய வார்த்தைப் பிரயோகத்தினால் கவின் நிலை ஏற்படல்.

**ரிஷபம்**
கொடுக்கல் வாங்கல் தொலைபேசிப் பேச்சினால் சுமூக நிலையை வந்தடைதல்.

**மிதுனம்**
முற்றாகும் நிலையில் இருந்த வெளியூர் பயணம் பெற்றோரின் நோய் காரணமாக் கைவிட்டு விடல்.

**கடகம்**
சகபணியாளர்களை அரவணைத்து பணிநிறைவேற்றவும் தேங்கிய சுமையை அற்றுப் போகச் செய்தலும்.

**சிம்மம்**
அரசியல் பற்றிய விமர்சனத்தால் வாக்குக் கலகம் ஏற்பட்டு பகைமை, தோற்றுவித்தல்.

**கன்னி**
விவாகமின்றி நெடுநாட்களாக இருக்கும் முதிர்கன்னியை நினைத்து கவலை கொள்ளல்.

**மீனம்**
காலாவதியான திகதியை அழித்து விற்பனை செய்ய முயன்றமை கண்டு பிடிக்கப்பட்டதால் தண்டனை

**கும்பம்**
ஆவணங்களின் குறைபாட்டினால் போக்குவரத்துக் காவலர்களினால் தண்டம் ஏற்படல்.

**மகரம்**
நீண்டகாலம் நிலவிய சொத்துப் பங்கீடு சம்பந்தமான பிரச்சினை சமரச நிலைக்கு வருதல்.

**தனுசு**
கோசரநிலையில் குரு / சனி கெட்டிருப்பதினால் புதிய மனை அமைக்கும் யோசனையை ஒத்தி வைத்தல்.

**விருச்சிகம்**
வெளியூர் பயணம் இடைத்தங்கல் நாட்டில் சேர்த்தமையை எண்ணிக்கவலை தக்கவைத்தல்.

**துலாம்**
ஏழரைச்சனி கடைக்கூற்றில் இருப்பதினால் புதிய இடத்தில் தொழில் ஆரம்பிக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

# அந்த 100 நாள் வேலைத்திட்டம் புதிய ஜனாதிபதியின் இலக்கு என்ன?



**புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனனின் நூறுநாள் வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விபரங்கள் தொடர்பான விலாவாரியான விபரங்கள் வெளியாகியுள்ளது.**

1. அரச ஊழியர்களுக்கு 10000 ரூபா சம்பள அதிகரிப்பினை வழங்குதல் மற்றும் அதன் ஆரம்பமாக உடனடி நடைமுறைக்கு வரும் வகையில் பெப்ரவரி மாத சம்பளத்திறகு 5000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குதல் அனைத்து கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி ஒன்றிணைந்த் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் மிகுதி தொகையுடன் மிகுதி சம்பள அதிகரிப்பை வழங்குதல்.

2. மோட்டார் சைக்கிள் வழங்கும் போது அசாதாரணத்திற்கு உள்ளான அரச ஊழியர்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து அவர்களுக்கும் நிவாரணம் வழங்குதல்.

3. அரசியல் அடிமை வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள பட்டதாரிகளை அரச சேவைக்கு உள்ளீர்த்து அவர்களின் தகைமைகளுக்கு ஏற்ற பதவி உயர்வு திட்டத்தை ஏற்படுத்தல்.

4. ஓய்வூதியதாரர்களின் வேற்றுமையை அகற்றும் வகையில் அவர்களுக்கு 3500 ரூபா மாதாந்த மேலதிக கொடுப்பனவை பெற்றுக்கொடுத்தல்.

5. அரச வங்கிகளில் உள்ள சிரேஷ்ட பிரஜைளின் நிலையான வைப்புக்களில் முதல் 10 இலட்சத்திற்காக செலுத்தப்படும் வட்டியை 15% வரை அதிகரித்தல்.

6. சமுர்த்தி கொடுப்பனவை அதிகப்பட்சம் 200 ரூபா வரை அதிகரித்தல்.

7. குழந்தையை பிரசவிக்கும் அனைத்து தாய்மாருக்கும் போசணைமிகு உணவை பெற்றுக்கொள்வதற்காக 20000 ரூபா வரையான கொடுப்பனவை பெற்றுக் கொடுத்தல்.

8. அத்தியாவசியப்பொருட்கள் பத்துக்காக அறவிடப்படும் அதிக வரியை அகற்றி விலையை குறைத்தல். அதற்கு இணையாக அத்தியாவசிய உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

9. எரிபொருட்களினால் அரசு அறவிடும் 4000 கோடிக்கும் அதிகமான வரியை அகற்றி, எரிப்பொருட்களின் விலையை குறைத்து அதன் பலனை பொது மக்களுக்கு பெற்றுக்கொடுத்தல்.

10. போக்குவரத்து கைத்தொழிலுக்கு தேவையான ஊக்குவிப்பு கொடுப்பனவு பெற்றுக்கொடுத்து அரசு மற்றும் தனியார் துறையின் பொது போக்குவரத்து சேவையின் வினைத்திறனை உயர்த்த நடவடிக்கை எடுத்தல்.

11. வீட்டு கேஸ் சிலிண்டரின் விலையை 300 ரூபாவால் குறைத்தல்.

12. நெல் கொள்வனவுக்கான உத்தரவாத விலை ஒரு கிலோவுக்கு 50 ரூபா வரை அதிகரித்தல்.

13. உருளைக்கிழங்கு ஒருகிலோவுக்கான கொள்வனவுக்கான உத்தரவாத விலை 80 ரூபா வரை அதிகரித்தல்.

14. பச்சை தேயிலை கொழுந்து ஒரு கிலோ வுக்கு 80-90 ரூபா வரையான மிதக்கும் விலையை பேணுதல்.

15. இறப்பருக்கு 350 ரூபா மிதக்கும் விலையைப் பேணுதல்.

16. பாற்பண்ணையாளர்களுக்கு ஒரு லீற்றர் பாலுக்கு தற்போது செலுத்தப்படும் 60 ரூபா உத்தரவாத விலையை 10 ரூபாவால் அதிகரித்தல்.

17. அனைத்து விவசாய கடன்களையும் 50%த்தால் கழித்து செலுத்தவுள்ள மிகுதி தொகையை மீளாய்வு செய்து செலுத்துவதற்கு சலுகைக்காலம் வழங்குதல்.

18. தற்போது வழங்கப்படும் மண்ணுக்கும் பயிர்ச்செய்கைக்கும் மனிதனுக்கும் தீங்கு விளைவிக்கும் தரம் குறைந்த உரத்திற்காக உயர் நிலையிலான மற்றும் தரத்திலான உரத்தை வழங்குதல்.

19. தற்போது வழங்கப்படும் தரம் குறைந்த உரத்திற்குப் பதிலாக தரத்திலான உரத்தை சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல்.

20. நடுக்கடலில் உயிரிழக்கும் மீனவருக்காக பத்து இலட்சம் வரையான காப்புறுதியினை அரச பங்களிப்புடன் பெற்றுக்கொடுத்தல்.

21. விவசாயிகளுக்கு பயிர்சேத காப்புறுதியினை அரச பங்களிப்புடன் பெற்றுக்கொடுத்தல்.

22. விவசாய, மீனவ சமூகத்திற்காக புதிய ஓய்வூதிய சம்பள திட்டத்தை ஆரம்பித்தல்.

23. முச்சக்கர வண்டி சாரதிகள், மேசன் அல்லது தச்சு, சிறிய வர்த்தகம் உள்ளிட்ட தொழிற்றுறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக ஓய்வூதிய திட்டம் ஒன்றை ஆரம்பித்தல்.

24. வெளிநாட்டில் தொழில் புரியும் ஊழியர்களுக்கு ஓய்வூதிய திட்டம் ஒன்றை ஆரம்பித்தல் மற்றும் அவர்களின் இந்நாட்டு வதியாதோர் கணக்குக்கு 2.5% வட்டியினை தற்போது வழங்கப்படும் வட்டி வீதத்திற்கு சேர்த்தல்.

25. மத்திய கிழக்கு உள்ளிட்ட வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் குடும்பத்தை பார்த்துக்கொள்வதற்காக விஷேட குடும்ப காப்பு வேலைத்திட்டத்தை ஆரம்பித்தல்.

26. அதிகபட்சம் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதி வரை அடகு வைத்துள்ள தங்க நகைகளுக்கு செலுத்த வேண்டிய அதிக வட்டி மற்றும் தண்ட பணத்தை அகற்றுதல்.

27. பல்வேறு நிதி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட உறுதி, கடனட்டை திட்டம் மற்றும் பிரமிட் திட்டம் மூலம் ஏமாற்றத்திற்கு உள்ளானமையினால் சிக்கியுள்ள கடனுக்கு மேல் கடனை அகற்ற தேவையான நடவடிக்கை எடுத்தல்.

28. பெண்களுக் எதிரான வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்தி பெண்களுக்கு மற்றும் சிறுவர்களுக்கு எமது நாட்டில் சுதந்திரமாக வாழும் வகையில் புதிய சட்டத்தை உருவாக்குதல் மற்றும் சட்டத்தை வலுவாக நடைமுறைப்படுத்தல்.

29. யுத்தத்தால் விதவைகளான அனைத்து சமூக பெண்களுக்கும் மற்றும் அவர்களில் தங்கி வாழ்பவர்களுக்கு விஷேட காப்புறுதி திட்டத்தை அறிமுகப்படுத்தல்.

30. அரசியல் தீர்மானம் எடுப்பதற்கு பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக மாகாண நிர்வாக மற்றும் மாகாண சபைகளில் பெண் அங்கத்துவத்தை குறைந்த பட்சம் 25%மாவது இருத்தல் வேண்டும் என்பதனை சட்டமாக்குதல்.

31. எமது இளைஞர்கள் எதிர்நோக்கும் வேலையில்லா பிரச்சினையை முழுமையாக இல்லாதொழிக்கும் நோக்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் மற்றும் சுய தொழில் பத்து இலட்சத்தை உருவாக்கும் வேலைத்திட்டத்தை உருவாக்குதல்.

32. இளைஞர் யுவதிகளுக்கு தாம் விரும்பிய கருத்தை முன்வைக்கவும் அதனை தெரிவிக்கவும் மற்றும் அதனை வினைத்திறன் மிக்கதாக உருவாக்க சுதந்திரமான இளமை காலத்தை அனுபவிக்க உள்ள உரிமையை உறுதிப்படுத்தல்.

33. இலவசமாக இன்டர்நெட் பெற்றுக்கொடுத்தல். பிரதான இடங்களில் "வைபை" பெற்றுக்கொடுத்தல்

34. இளைஞர் பாராளுமன்றத்திற்கு பண அதிகாரத்தை பெற்றுக்கொடுத்து இளைஞர் சமூகம் மற்றும் ஏனைய இளைஞர் அமைப்புக்களினால் முன்வைக்கப்படும் இளைஞர் வேலைத்திட்டங்களுக்கு செலவு செய்வதற்கு 2015 ஆம் ஆண்டுக்கு 250 மில்லியன் ரூபா இளைஞர் நாடாளுமன்றத்திற்கு ஒதுக்குதல்.

35. கடன் தகவல் பிரிவில் (CRIB) பட்டியலில் உள்ளடக்கப்பட்டு கடன் தொல்லையில் சிக்கியுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரிகள் மற்றும் கிரடிட் கார்ட உரிமையாளர்களை அதிலிருந்து மீட்டு சிறிய நிபந்தனையுடனான கடன் செலுத்தும் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுத்தல்.

36. நாட்டின் வளர்ச்சிக்கு அர்ப்பணிக்கும் உள்நாட்டு வியாபார சமூகத்தினரை உருவாக்குவதற்காக சிறிய் மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு சிறிய நிபந்தனையுடனான இலகு கடன் திட்டத்தை அறிமுகபடுத்தல்.

37. ஏற்றுமதியை அதிகரித்தல் மற்றும் தொழில் வாய்பபை அதிகரித்தலை நோக்காக கொண்டு GSP10 உதவியை மீண்டும் பெற்றுக்கொடுத்தல்.

38. தற்போது நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கும் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கியை ஒன்றிணைக்கும் வேலைத்திட்டத்தை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வருதல்.

39. சிறிய கடன் கட்டுப்பாடு செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு சுயாதீன அதிகார சபையை உருவாக்குதல.

40. சிறிய முயற்சியாளர்களை பாதுகாப்பதற்காக அரச பணியகத்தை ஸ்தாபித்தல்

41. முச்சக்கர வண்டி துறைக்காக முச்சக்கர வண்டி உரிமையாளர்கள், வங்கி பிரதிநிதிகள் உள்ளடங்கிய அரச அலுவலகத்தை உருவாக்குதல்.

42. வரவு செலவு திட்டத்தில் இலவச சுகாதாரத்திற்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 1.8% வரையான தொகையை 3%மாக அதிகரித்தல்.

43. அரச வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக வரும் நோயாளிக்கு தேவையான அனைத்து மருந்துகளும் குறைவில்லாமல் வைத்தியசாலைகளிலேயே வழங்குதல்.

44. அரச வைத்தியசாலைகளில் அறுவை சிகிச்சைக்காக பட்டியலில் இணைத்து உள்ள நோயாளிகளினதும் அறுவை சிகிச்சைகளை பூர்த்தி செய்ய அவசர வேலைத்திட்டம் ஒன்றை முன்வைத்தல்.

45. அரச வைத்தியசாலைகளில் வெளி நோயாளர் பிரிவை இரவு 10.00 மணி வைரை திறக்க நடவடிக்கை எடுத்தல்.

46. சிறுநீரக நோய்க்கு மூல காரணி என சந்தேகிக்கப்படும் களைநாசினி வகை, ஏனைய விவசாய இரசாயன பொருட்களுக்கு இடைக்கால தடை விதித்தல் மற்றும் சிறுநீரக நோயை கட்டுப்படுத்துவதற்கு குறுகிய கால மற்றும நீண்டகால திட்டத்தை வகுத்து அவற்றை நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுத்தல்.

47. உணவு, அழகுசாதன பொருட்கள் மற்றும் சேவை, ஔடதம் போன்ற அனைத்து நுகர்வு பொருட்கள் கொள்வனவுக்காக வலுவான நிறுவகத்தை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்தல்.

48. ஆயுர்வேத வைத்திய சேவையை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

49. அனைத்து மேலைத்தேய, கீழைத்தேய மற்றும் தேசிய வைத்திய முறையை சிறந்த முறையில் ஒன்றிணைத்து ஒன்றிணைந்த சேவையினை மக்களுக்கு வழங்க தேவையான நடவடிக்கை எடுத்தல்

50. ஹெரோயின், கேரல கஞ்சா, பெபா உள்ளிட்ட அனைத்து போதைவஸ்தையும் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் முழுமையாக அகற்ற முன்னுரிமை வழங்குதல் மற்றும் தற்போது போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள இளைஞர்களை புனர்வாழ்வளிப்பதற்காக நாடளாவிய ரீதியில் உடனடி செயற்றிட்டத்தை வெளிநாட்டு உதவியுடன் முன்னெடுத்தல்.

51. போதைவஸ்து வியாபாரிகளை சுற்றிவளைப்பதற்காக ஒன்றிணைந்த விஷேட படையணியை உருவாக்குதல்.

52. புகையிலை உற்பத்தி பொதிகளில் பட ரீதியான சுகாதார எச்சரிக்கையை 80% வரை அதிகரித்தல்.

53. கெசினோ அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்தல்.

54. சுங்க வரி செலுத்தாமல் மேற்கொள்ளப்படும் எதனோல் வியாபாரத்தை கட்டுப்படுத்தல்.

55. தற்போது இலவச கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள 1.7% வரையான ஒதுக்கீட்டை 6% வரை இலக்கை நோக்கி நகர்தலை ஆரம்பித்தல்.

56. உயர் கல்வி அமைச்சரினால் கைப்பற்றப்பட்டுள்ள பல்கலைக்கழக அதிகாரத்துவத்தை மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக மீண்டும் பல்கலைக்கழகங்களுக்கு பெற்றுக்கொடுத்து அரசியல் தீர்மானத்திற்கு உட்பட்டுள்ள பல்கலைக்கழகத்தை அதிலிருந்து மீட்டல்.

57. பல்கலைக்கழக மஹாபொல புலமைப்பரிசிலை ரூபா 5000 வரை அதிகரித்தல்.

58. உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தியடைந்த அனைவருக்கும் உயர் டிப்ளோமா அல்லது பட்டப்படிப்பு வரை கல்விகற்க தேவையான அவகாசத்தை வழங்குதல்.

59. பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கு பிள்ளைகளை இணைத்துக்கொள்ளும் போது சாதாரண, முறையான திட்டத்தை உருவாக்குதல். முதலாம் ஆண்டுக்கு அனுமதிக்கும் போது தற்போது அசாசாதாரணத்திற்கு ஆளாகியிருக்கும் பிள்ளைக்களுக்கு உதவியளித்தல்.

60. பாடசாலைகளுக்கு மாணவர்களை உள்ளீர்க்கும் போது தற்போது உள்ள தாமதத்தை முற்றாக இல்லாமல் செய்து முதலாம் தவணை ஆரம்பமாகும் போது அனைத்து பிளளைகளுக்கும் பாடசாலை அனுமதியினைப் பெற்றுக கொடுத்தலை சான்றுப்படுத்தல்.

61. பாடசாலைகளில் சமயத்தை போதிக்கும் சுற்றுநிருபத்தை அனைத்து பாடசாலைகளிலும் செயற்படுத்தல். அவ் வேலைத்திட்டத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு அனைத்து மத பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதான குழுவை நியமித்தல்.

62. சர்வதேச பாடசாலைகளை அரச கண்காணிப்புக்கு உட்படுத்தல்.

63. மீன்பிடி படகு, வளை மற்றும் படகு எஞ்சினுக்கு தற்போது விதிக்கப்படும் அதிக வரியை அகற்றுதல்.

64. வெளிநாட்டு மீன்பிடி படகு இலங்கை கடல் எல்லையை கடப்பதை கட்டுப்படுத்தல்.

65. இறைச்சி ஏற்றுமதிக்கு அற்றுப்போயுள்ள ஐரோப்பிய சந்தையை மீண்டும் பெற்றுக்கொள்ளுதல்.

66. காற்று மற்றும் கடலில் ஏற்படும் அசாதாரண நிலை தொடர்பில் சரியான தகவலை உடனடியாக மீனவருக்கு பெற்றுக்கொடுக்க கூடிய காலநிலை அவதான வேலைத்திட்டத்தை தயாரித்தல்.

67. மூடப்பட்டுள்ள கால்வாய் கட்டமைப்பை மீண்டும் புனர் நிர்மாணம் செய்தல்.

68. குளங்களில் உள்ள சேற்றை அகற்றுதலை ஆரம்பித்தல்.

69. தற்போது புல்வெட்ட, வீதிகளை சுத்தப்படுத்த, ஓடைகளை சுத்தப்படுத்த பயன்படுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரை அதிலிருந்து மீட்டு முப்படையை இராணுவ வேலைக்கு மாத்திரம் ஈடுப்படுத்தல். (தொடர்ச்சி 17 ஆம் பக்கம்)

# வல்வெட்டித்துறை கம்பர்மலை வீதி

# மீள் புனரமைப்பு செய்ய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பிரதேச சபைக் குட்பட்ட வல்வெட்டித்துறை கம்பர்மலை - வேலகாட்டு வீதி விரைவில் மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையை கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர்கள், சபையின் தலைவர் செயலாளர் இணைந்த வகையில் மேற்கொண்டுள்ளனர்.

கரவெட்டி பிரதேச சபைக் குட்பட்ட கம்பர்மலை - வேலகாட்டு சந்தி வரையிலான வீதி கடந்த 40 வருடங்களுக்கு மேலாக மீள்புனரமைப்பு இன்றி அழிவடைந்துள்ளது.

மேற்படி வீதியின் கல்லுகள் வெளிக்கிளம்பிய நிலையில் வீதி முற்றாக பிரிந்துள்ளது.

மேற்படி வீதியின் மீள்புனரமைப்பு குறித்து இது கடந்த 5 ஆண்டுகளில் 10 இற்கும் மேற்பட்ட கடிதங்களையும் மகஜர்களையும் சமர்ப்பித்து விட்டோம்.

ஆனால் இதுவரை மேற்படி வீதி மீள்மதிப்பீடு செய்யவோ அல்லது.

வரவு செலவு திட்டத்தில் இடப்படவோ இல்லை.

ஆனால் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக சபை அறிவித்துள்ளது.

இந்த வீதியை விரைவில் மீள் புனரமைப்பு செய்ய சபையின் தவிசாளர், செயலாளர் முன்வந்துள்ளனர்.

இல்லாவிடில் எதிர்வரும் 23 ஆம் திகதி வல்வெட்டித்துறை கம்பர்மலை, வேலகாடு, ஊரிக்காடு, நாவலடி, மயிலியதனை மற்றும் உடுப்பிட்டி வடக்கு மக்களுடன் ஒன்று கூடி போராட்டங்களை நடாத்துவோம் என கம்பர்மலை - ஊரிக்காடு மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மேற்படி விடயம் தொடர்பில் சபையின் அசமந்தப் போக்கு தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர், ஆளுநர் ஆகியோரின் விசேட கவனத்திற்கு கொண்டு வரவும் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

(92)

# மடு மாதா தேவாலயத்துக்கு விசேட பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான விஜயத்தின் போது பாப்பரசர் மடுத்தேவாலயத்துக்கு எதிர்வரும் புதன்கிழமை வருகை தந்து அங்கு ஆராதனைகளை நிகழ்த்தவுள்ளார்.

மடுத்தேவாலயத்தில் நடைபெறும் ஆராதனையிலும், ஆசீர்வாத நிகழ்விலும் கலந்து கொள்ளும் பக்தர்களின் போக்குவரத்து வசதி கருதி அவர்களின் வருகைக் கேற்ப காரைநகர் பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், பேருந்து நிலையங்களில் இருந்தும், யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலிருந்தும் எதிர்வரும் 13ஆம், 14ஆம் திகதிகளில் பேருந்து சேவைகள் இடம்பெறும் என்று இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய காரியாலயம் அறிவித்துள்ளது.

# பனங்கிழங்கு விற்பனை

(யாழ்ப்பாணம்)

பனங்கிழங்கு சீசன் ஆரம்பமாகியுள்ளதையடுத்து யாழ். குடாநாட்டு சந்தைகளில் அதிகளவான பனங்கிழங்குகள் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தக் கிழங்குகள் தலா 5 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றை அதிகம் தென்னிலங்கையிலிருந்து வருகை தரும் மக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)


புன்னாலைக்கட்டுவன் வடக்கு கடவத்தனை இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்தடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பரத்திருவிழாவும், 19 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன என ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சி.கிருஷ்ணமாமிக்குருக்கள் தெரிவித்துள்ளார்.



கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தில் சாவகச்சேரி பொலிஸாரினால் நடாத்தப்பட்ட நடமாடும் சேவையின் இறுதிநாள் நிகழ்வின் போது வீதியோட்டப்போட்டியில் கலந்து கொண்டவர்களையும், பொலிஸ் அதிகாரிகளையும் காணலாம். (51)

# கட்டுவன் ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில் 18 படிதரிசனமும் யாத்திரையும்



யாழ்ப்பாணம் கட்டுவனிலுள்ள ஸ்ரீ ஐயப்பன் கோவிலில் ஐயப்ப அடியார்கள் படியேறி நெய்அபிஷேகம் செய்யவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

சபரிமலைக்குச் சென்று கலியுக வரதனாம் ஸ்ரீ தர்மஸாஸ்தாவை தரிசனம் செய்ய முடியாத மாலையணிந்த ஐயப்ப பக்தர்கள் இலங்கையின் பலபகுதிகளிலிலுமிருக்கும் ஐயப்பன் ஆலயங்களில் 18 படிகளேறி நெய்யபிஷேகம் செய்து தமது விரதத்தினை பூர்த்தி செய்வது வழமை. இம்முறை கொழும்பில் அளுத்மாவத்தை ஸ்ரீ ஆனந்த ஐயப்பன் தேவஸ்தானம் புனரமைக்கப்பட பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருப்பதால் கொழும்பு, மொனராகலை, ரூவான் வெல்ல போன்ற இடங்களிலிருந்து ஐயப்ப பக்தர்கள் நெய் அபிஷேகம் செய்ய முடியும்.

சபரிமலை போலவே யாழ்ப்பாணத்தில் முதன்முதல் கட்டப்பட்ட கட்டுவன் கரண்டக்குளம் ஸ்ரீ ஐயப்பன் கோவிலில் வருடாவருடம் யாத்திரை சென்று படியேறி நெய்யபிஷேகம் செய்யும் பக்தர்கள் இம்முறையும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் புலவனார் வீதியிலுள்ள கட்டுவன் ஐயப்பன்கோவில் குருஸ்வாமியின் வாசஸ்தலத்தில் திருமுடிகட்டி அடுத்த நாள் செவ்வாய்க்கிழமை அதிகாலையில் தீபாராதனை, பஜனை, விசேட பூஜைகளின் பின் 5.30 மணியளவில் பக்திபூர்வமாக திருமுடிகளைத் தாங்கி யாத்திரையை மேற்கொள்வர்.

யாத்திரை, புலவனார் வீதியூடாக புறப்பட்டு ஆடியபாதம் வீதிவழியாக திருநெல்வேலிச் சந்தியை சென்றடைந்து அங்கிருந்து பலாலி வீதி வழியாக கோண்டாவில் சந்திக்குச் சென்று பின் உப்புமடம் பிள்ளையார் கோவில் சந்தியைச் சென்றடைந்து காங்கேசன்துறை வீதிவழியாக மருதனார்மடம் - சுன்னாகம் - மல்லாகம் சந்திக்கு வந்து பின் கட்டுவன் வீதியூடாக ஐயப்பன் கோவிலை வந்தடைந்தபின் பதினெட்டுப் படிகளேறி நெய்யபிஷேகம் செய்வதுடன் நிறைவு பெறும்.

மகரஜோதி தரிசனம் 15ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.40 மணிக்கு நடைபெறும்.

ஆலயத்தில் விரும்பிய பக்தர்கள் முன்கூட்டியே தொடர்புகொண்டு (தொலைபேசி இலக்கம். 0775292140) தமது வசதிப்படி 18 படிகளேறி நெய்அபிஷேகம் செய்ய முடியும். கடந்த கார்த்திகை மாதம் தொடக்கம் ஜனவரி 19வரை சபரிமலையில் மண்டலம் முடிந்தபின்னர் 4 நாட்கள் நடை அடைக்கப்பட்டு மகரசங்கிராந்திக்காக மீண்டும் ஜனவரி 20 வரை திறந்திருக்கும். சபரிமலையில் மாதாந்த பூஜைக்கு மலையாள மாத ஆரம்பத்தின் 5 நாட்கள் நடைதிறக்கும்.

பங்குனி உத்தர உற்சவம், சித்திரை விசு, ஆவணி ஓண விசேட தினங்களில் வழமைக்கு மாறாக மேலதிக நாட்களிலும் நடை திறக்கப்பட்டு பூஜைகள் நடைபெறும். கட்டுவனில் விசேட உற்சவ நாட்களைத் தவிர வாரத்தில் ஒவ்வொரு சனிக்கிழமை மட்டும் பூஜை நடைபெறுவதுடன், தமிழ் மாதப் பிறப்பிலும் பூஜைகள் நடைபெறுவது வழமையாகும்.

சபரிமலைக்குச் செல்ல முடியாத பலபக்தர்கள் பாதயாத்திரையாக திருமுடி தாங்கி வந்து பதினெட்டுப் படிகளேறி நெய்யபிஷேகம் செய்யமுடியும் என தெரிவிக்கப்படுகிறது.



# அடிப்படைவாதம் என்றால் என்ன? 1

– எச்.பீர்முஹம்மது

அடிப்படைவாதம் (Fundamentalism) என்ற சொல்லாடல் தற்போது உலக அளவில் பிரபலமான ஒன்றாக மாறி வருகிறது. பெரும்பாலும் மதங்களைக் குறிக்க இது பயன்படுத்தப்படுகிறது. ஆனால் அது லௌகீக உலகின் எல்லாவித போக்குகளையும் குறிக்கும் ஒன்று.

ஒன்றின் அடிப்படைகளை உள்வாங்கி அதன் நுனிமங்கள் மீது தொங்கிக் கொண்டிருப்பது. இதன்வழி வரலாற்றின் வளர்ச்சி போக்குகள் மீது எவ்வித நம்பிக்கைகள் அற்று இருப்பது. உலகின் போக்கை, இயக்கத்தை நிராகரிப்பது அல்லது ஏற்றுக்கொள்ள மறுப்பது. எல்லாவற்றையும் தான் நம்பும் அடிப்படைகள் மீது உரசிப் பார்ப்பது. அதன் மீது குழப்பமும், சந்தேகமும் கொள்வது...

இவற்றின் மொத்த கூறுகள் அடிப்படைவாதம் என்றழைக்கப்படுகின்றன. இந்நிலையில் சுய சிந்தனையற்ற நடைமுறை செயற்பாடுகள் அடிப்படைவாதிக்கு உரியதாக இருக்கின்றன. மேலும் வாழ்வின் எல்லாவித இயக்கங்களுக்கும் ஓர் அடிப்படைவாதி தான் நம்பும் கோட்பாடு அல்லது கொள்கையின் மீது உரசி உரசி நிறுபான். அது மட்டுமே உலகம் என்று நம்புவான்.

இன்றைய உலகில் அடிப்படைவாதம் பல கிளைகளாக, பல துறைகளை நோக்கி தன்னை வியாபித்திருக்கிறது. மத அடிப்படைவாதம், மொழி அடிப்படைவாதம், சந்தை அடிப்படைவாதம், பொருளாதார அடிப்படை வாதம், புரட்சி அடிப்படைவாதம் இப்படியாகப் பல தளங்களை நோக்கி தன்னை விரிவுபடுத்தி நிற்கிறது.

மொழி அடிப்படைவாதம் என்பது மொழி மட்டுமே எல்லாவற்றையும் தீர்மானிக்கும். மொழியைத் தூக்கிப் பிடித்தல் பிரதேச செழிப்பாகி விடும் என்று நம்புவது. மேலும் மொழியை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த விடாமல் பழம்பெருமையின் பெயரில் தடுப்பது.




இவையெல்லாம் மொழி அடிப்படைவாதத்தில் உள்ளடங்குகின்றன.

சந்தை அடிப்படைவாதம் பிந்தைய முதலாளித்துவ உலகின் நுகர்வு கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டது. சந்தை தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கும். அது அடிப்படையில் சுதந்திரமாக இயங்கும். எல்லா சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் வல்லமை கொண்டது போன்ற அதீத நம்பிக்கைகளை சந்தை அடிப்படைவாதம் கொண்டிருக்கிறது

மேலும் ஒரு பிரதேசத்தில் அரசின் பங்களிப்பைக் குறைத்து சந்தையை மையப்படுத்தி அனைத்தையும் ஒருமுகப்படுத்துவதன் மூலம் அதனை ஆளுமை செய்ய முடியும் என்ற கருத்தாக்கமும் இதில் நிலவுகிறது. தற்போதைய உலகில் சராசரி மனித வாழ்வை அழிக்கும் ஒன்றாக சந்தை அடிப்படைவாதம் இருக்கிறது.

பொருளாதார அடிப்படைவாதம் என்பது பொருளாதாரத்தை மையமாகக் கொண்டது. குறிப்பாக, ஊழல் தான் எல்லா பிரச்சினைகளுக்கும் காரணம். ஊழல் ஒழிந்து விட்டால் எல்லாவற்றையும் ஒழித்து விட்டால் என்ற நம்புவது மேலும் பொருளாதாரம் செழித்து விட்டால் எல்லா பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்றும் இவ்வகையான அடிப்படைவாதம் நம்புகிறது.

புரட்சி அடிப்படைவாதம் என்பது வறட்டு மார்க்ஸியர்களைக் குறிப்பது மார்க்ஸையும், ஏங்கல்ஸையும் கடவுளின் இடத்திற்குக் கொண்டு போகும் நிலை. அவர்கள் இருவரையும் விட்டால் உலகம் ஏதுமில்லை என்று நம்புவது. மார்க்ஸியர்களில் உலக அளவில் இம்மாதிரியான சிந்தனை கொண்டவர்கள் சிறிய எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக மத அடிப்படைவாதத்தில் உள்ள மிக ஆபத்தானது காரணம் மதங்களை பின்பற்றும் மனிதர்கள் மாறி மாறித் தங்களை அழித்துக்கொள்ள மத அடிப்படைவாதம் காரணமாக அமைகிறது. மதம் தனிமனித அந்தரங்கமாக இருக்கும் பட்சத்தில் அது பெரும் மோதல்களை உருவாக்குவதில்லை. எப்போது சமூகத்தின் கூட்டுப் பிரக்ஞையாக அது மாறுகிறதோ அப்போது முதல் அது ஆபத்தானதாக மாறி விடுகிறது.

அடிப்படைவாதம் என்ற சொல்லாடல் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவில் கிறிஸ்தவ புரோட்டஸ்டண்ட் பிரிவைக் குறிக்கும் ஒன்றாகத்தான் இருந்தது.

காரணம், அன்றைய ஐரோப்பாவில் திருச்சபை எல்லாவற்றையும் தீர்மானிக்கும் ஒன்றாக, கடவுளை அணுக, அடைய ஒரே அதிகாரபூர்வ அமைப்பாக தன்னை நிறுவிக் கொண்டது. இதனை எதிர்த்து தான் புரோட்டஸ்டண்ட் மற்றும் விடுதலை இறையியல் இயக்கங்கள் உருவாயின. இந்நிலையில் மேற்கண்ட இயக்கங்கள் பைபிளுக்குப் புதிய விளக்கங்கள் கொடுத்து அதன் அடிப்படையோடு கிறிஸ்தவர்கள் இயைந்து கொள்ள வேண்டும் என்றன. மரபார்ந்த திருச்சபையின் அதிகாரம் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. நவீனத்துவ கோட்பாட்டின் உருவாக்கத்திற்கான தேவையும் இங்கிருந்து தான் தொடங்கியது.

மேலும் தொடக்க கால நவீனத்துவம் இருபதாம் நூற்றாண்டின் நவீனத்துவ சிந்தனைகளிலிருந்து மாறுபட்டு இருந்தது. பிந்தைய கால நவீனத்துவத்தின் முக்கிய அம்சங்களான மதசார்பின்மை, ஜனநாயகம், சமதர்மம் மற்றும் தேசியம் ஆகிய கருத்து கோள்களுக்கு தொடக்ககால நவீனத்துவம் தான் அடித்தளம் அமைத்தது. கத்தோலிக்க கிறிஸ்தவ திருச்சபைக்கு எதிரான நிலைப்பாட்டிலிருந்து தனக்கான கருதுகோளை வடிவமைத்துக் கொண்டது.

மேலும் இறைநம்பிக்கையை ஆரம்பகால நவீனத்துவ வாதிகள் ஏற்றுக்கொண்டனர். மேலும் அவர்களில் சிலர் உலக நகர்வுகள் அனைத்தும் இறைவனின் உருவமே என்ற Pantheism கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்தனர். இவர்கள் இம்மாதிரியான நம்பிக்கை கொண்டிருந்தபோதிலும் கடவுளின் நிலைப்புத் தன்மை, நிலையான இருப்பு ஆகியவை குறித்து உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை.

மேலும் தொடக்ககால நவீனத்துவவாதிகள் பைபிள் மீது நம்பிக்கை கொண்டிருந்த போதிலும், அதன் லௌகீக பொருத்தப்பாடுகள் குறித்த சந்தேகம் கொண்டிருந்தனர். மேலும் அவர்கள் நாத்திகர்களாக இல்லாதபோதும் புனிதப் பிரதிகளின் முழு போதனை குறித்த தர்க்கரீதியான கேள்விகளைக் கொண்டிருந்தனர்.

கிறிஸ்தவ திருச்சபையின் மத ஆதிக்கத்தை எதிர்த்து உருவான நவீனத்துவ இயக்கம் பிந்தைய கட்டத்தில் பரிணாம வளர்ச்சி பெற்று தெகார்தேயின் அறிவுவாத கோட்பாட்டை உள்வாங்கியது. அதற்குப் பிந்தைய நவீனத்துவவாதிகள் எல்லாம் பகுத்தறிவு ரீதியான கருத்துக் கட்டமைப்பை உடையவர்களாக மாறினார்கள்.

இங்கு மத அதிகாரம் முழுவதும் கேள்விக்குட்படுத்தப்பட்டது. மத அடிப்படைவாதிகள் மற்றும் எதேச்சதிகாரிகள் எல்லாம் விமர்சிக்கப்பட்டனர். பைபிளின் நதிமூலம் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. அதன் வசனங்கள் விமர்சிக்கப்பட்டன. மனித விடுதலைக்காக அதனைப் பயன்படுத்த வேண்டும் என்ற குரல் மேலோங்கி இருந்தது. இது உயர் விமர்சனம் (High Criticism) என்றழைக்கப்பட்டது.

(தொடரும்)




# யுவன் சங்கர் ராஜா இரகசிய திருமணம்

இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜாவிற்கும், ஜப்ருன்னிஸாருக்கும் இஸ்லாம் முறைப்படி கீழக்கரையில் புத்தாண்டு அன்று இரவு திருமணம் நடைபெற்றது.

யுவன் சங்கர் ராஜா தனது காதலியான லண்டனைச் சேர்ந்த பாடகி சுஜாயாவை கடந்த 2005ஆம் ஆண்டு திருமணம் செய்தார். 2008 ஆம் ஆண்டு அவர்கள் விவாகரத்து பெற்று பிரிந்துவிட்டனர்.

அதற்கு பிறகு, ஷில்பா மோகன் என்பவரை கடந்த 2011 ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்டார் யுவன். ஷில்பாவுடனும் பிரச்சினை ஏற்பட்டது. இதையடுத்து யுவனை விட்டு ஷில்பா பிரிந்து சென்றுவிட்டார்.

தனது தாயின் மறைவிற்கு பிறகு மனமுடைந்த யுவன் சங்கர் ராஜா இஸ்லாம் மதத்தைத் தழுவினார். தினமும் 5 நேரம் தவறாமல் தொழுது வருவதாக யுவன் தெரிவித்தார். ஜப்ருன்னிஸார் துபாயில் ஆடை வடிவமைப்பாளராக உள்ளார்.


கீழக்கரையில் இருந்து 5 கி.மீ தொலைவில் உள்ள செங்கழுநீர் ஓடை என்னும் கிராமத்தில் உள்ள 5 ஏக்கர் பரப்பளவு கொண்ட கடற்கரையோர தென்னந்தோப்பில் இரவு 9 மணிக்கு இத்திருமணம் நடைபெற்றது. அவசர கோலத்தில் நடைபெற்ற இத்திருமணத்தில் யுவன் குடும்பத்தில் இருந்து அவரது தங்கை பவதாரணி மற்றும் அவரது கணவர் மட்டுமே கலந்து கொண்டுள்ளனர். இளையராஜா, கார்த்திக்ராஜா என யாருமே கலந்து கொள்ளவில்லை.

இஸ்லாம் மதத்தைத் தழுவிய யுவன் சங்கர் ராஜா, தனது பெயரை அப்துல் ஹாலிக் என பெயர் மாற்றம் செய்திருப்பதும், "மாஸ்" படத்தில் இருந்து தனது பெயரை மாற்றம் செய்ய இருப்பதும் குறிப்பிடத்தக்கது.


சிலர் மறைந்துவிட்டாலும், அவர்களுடைய புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும். அவர்கள் சார்ந்த பொருள்கள், கையெழுத்துகள் அமோக விலை போகும். இதோ சில பிரபலங்களின், கையெழுத்து மதிப்பு உங்கள் பார்வைக்கு:



ஜேம்ஸ்டீன் (நடிகர்)
44 இலட்ச ரூபாய்



புரூஸ்லீ (நடிகர்)
27 இலட்ச ரூபாய்




அல்பேர்ட் ஐன்ஸ்டீன் (விஞ்ஞானி)
21 இலட்ச ரூபாய்



மொழியை அழித்த கட்டத்திற்கு நகர்த்த விடாமல் பழம்பெருமையின் பெயரில் தடுப்பது. நம்புகிறது. புரட்சி அடிப்படைவாதம் என்பது அம்சங்களான மதசார்பின்மை, ஜனநாயகம், சமதர்மம் ஆகியவற்றை என்றழைக்கப்பட்டது.

(தொடரும்)



விரிப்பின் மீது அவற்றை வைத்து, கதவு மற்றும் ஜன்னல்களைச் சாத்தி திரையிட்டார். பின்னர் வெளியில் வந்து, "அரசே! இவர்களிடம் உள்ளே போய் அவரவர்கள் வெண்மை என்று கருதும் பொருளை எடுத்து வரச் சொல்லுங்கள்" என்றார்.

அனைவரும் உள்ளே போயினர். அவர்களுக்கு உள்ளே இருட்டில் எதுவும் தெரியவில்லை. ஒருவருக்குப் பால் பாத்திரம் காலில் இடறி, பால் தரையில் கொட்டியது. இன்னொருவர் காலில் நகைகள் இடறின. வேறொருவர் பூக்களை மிதித்து விட்டார். ஒரு பாத்திரத்தில் இருந்த சுண்ணாம்பு கவிழ்ந்தது.

மூவரும் பதறி, ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டனர்.

அதே சமயம் தெனாலிராமன் அறையில் மேற்புறக் கதவைத் திறந்தார். அறையில் ஒளி பரவியது. அப்போது அங்கிருந்த பொருட்கள் பளிச்சென்று தெரிந்தன.

# வயதானவருக்கு ஓய்வு கொடுக்கலாமே...!

ஒரு சமயம், தெனாலிராமன் அரசவையில் இருந்த போது, தூக்கம் கண்ணைச் செருகியது. அதைக் கண்டு உறுப்பினர்கள் சிரித்து விட்டனர்.

அப்போது அமைச்சர், "அரசே! தெனாலிக்கு வயதாகி விட்டது. ஓய்வு கொடுங்கள்" என்றார். அரசரிடம் பதில் இல்லை.

மறுநாள் அரசர், "என் மனதில் ஒரு கேள்வி, உலகிலேயே வெண்மையான பொருள் எது? இதற்குச் சரியான பதிலை நீங்கள் சொல்லி விட்டால், தெனாலியை ஓய்வு கொடுத்து அனுப்பி விடுவேன்" என்றார்.

அமைச்சர், "வெள்ளி நகை தான்" என்றார்.

அரசகுரு, "பால் தான்!" என்றார்.

சிலர், "சம்பா மலர்!" என்றனர்.

வேறு சிலர், "மல்லிகை தான்" என்றனர்.

இன்னும் சிலர், "சுண்ணாம்பு தான்!" என்றனர்.

அரசர் திருப்தி அடையவில்லை. தெனாலியிடம் கேட்டார்.

"நாளைக்குக் கூறுகிறேன்" என்றார் தெனாலி.

மறுநாள் தெனாலி வெள்ளி நகை, கொஞ்சம் பால், சம்பா மலர், மல்லிகை மலர்கள் ஆகியவற்றை வரவழைத்தார். சுண்ணாம்பும் வந்தது. பிறகு ஒரு பெரிய அறையில் தரை

அச்சமயம், அரசர் கிருஷ்ணதேவராயர் உள்ளே வந்தார்.

உடனே தெனாலிராமன், "அரசே! என்னுடைய பதில் இப்போது உங்களுக்கு விளங்கியிருக்குமே! உலகில் எல்லாவற்றையும் விட வெண்மையான பொருள் பாலோ, வெள்ளி நகையோ, சுண்ணாம்போ அல்லது மலர்களோ அல்ல. அப்படியிருந்தால், இருட்டறையில் அவை பளிச்சிட்டிருக்க வேண்டுமே! ஏன் கண்ணுக்குத் தெரியவில்லை? எனவே, உலகில் வெண்மையான பொருள் சூரியனின் ஒளி மட்டும்தான். அதனால்தான் உலகின் மற்ற எல்லாப் பொருள்களும் பிரகாசிக்கின்றன" என்றார்.

அதைக் கேட்ட அரசர், மகிழ்ச்சியடைந்து, தெனாலியை வாரி அணைத்துக் கொண்டார்.

சபையினரிடம் அரசர், "தெனாலிராமன் நமக்கு ஏன் இத்தனை பிரியமானவனாக இருக்கிறான் என்பதை இப்போது நீங்கள் அறிந்து கொண்டிருப்பீர்களே...?" என்றார்.

"தெனாலிக்கு ஓய்வு கொடுத்து அனுப்புங்கள்" என்று யோசனை கூறியவர்கள் எல்லாம் வாயடைத்துப் போயினர்.



ஏழுதும் வரிகள் கீழ்நோக்கிச் செல்பவர் வாழ்க்கையில் அதிருப்தி, மனஉளைச்சல் உள்ளவர். யாருடனும் அதிகம் பழக மாட்டார். நேராக, சீராக எழுதுபவர் தீர்க்கமாக முடிவெடுக்கக் கூடியவர். தொடர் ஓட்டம்போல் நீட்டி எழுதுபவர் அவசரக்காரராக இருப்பார்.

# எழுதும் நீங்கள் யார்?

பெரிய எழுத்துகள் எழுதுபவர் தன்னம்பிக்கை உள்ளவர். மிகச் சிறிய எழுத்துகள் எழுதுபவர் தன் கருத்துகளை வெளியில் சொல்ல மாட்டார்.

கையெழுத்து இடப்பக்கம் சாய்ந்திருந்தால் அவர் யாருடனும் கலகலப்பாகப் பேச மாட்டார்.


-'உடலின் மொழி ரகசியங்கள்' என்னும் நூலில் இருந்து.

# அழியாப் புகழ்



அல்பேர்ட் ஐன்ஸ்டீன் (விஞ்ஞானி) 21 இலட்ச ரூபாய்

ஜோன் லெனன் (பாடகர்) 17 இலட்ச ரூபாய்



மர்லின் மன்றோ (நடிகை) 16 இலட்ச ரூபாய்

# வாசிப்பு

- அபிலாஷ் சந்திரன் -

வாசிப்பு என்பது இலக்கியமோ அல்லது ஒருதுறை பற்றி அறிதலோ அல்ல. சுய அறிதல் தான் வாசிப்பின் உண்மை நோக்கம். வாசகனாக அந்தஸ்தை பெற படிப்பவர்கள் போலி படிப்பாளிகள்.

சிறுவயதில் இருந்தே வாழ்வு குறித்த நம்பிக்கைகளும் அபிப்ராயங்களும் ரசனையும் நமக்குள் உருவாகின்றன. ஆனால் இவற்றை நம்மால் நேரடியாக அறிய முடியாது. வாசிப்பு நம் ரசனைக்கு ஒரு முகம் அளிக்கிறது. அரைகுறையாய் தோன்றிய எண்ணங்களுக்கு தர்க்கமும் கூர்மையும் அளிக்கிறது. சரியான வாசிப்பை கண்டடைவது என்பது நம்மை கண்டடைவதுதான்.

உங்களுக்கு ஆன்மீக நாட்டம் சிறுவயது முதலிலே உண்டென்றால் சிறு ஆன்மீக வெளிச்சம் இல்லாத எதுவும் ஈர்க்காது. காதல் கதையோ துப்பறியும் நாவலோ தத்துவ நோக்கு இருந்தால்தான் ரசிப்பீர்கள். அது போல் சிலருக்கு உறவுகள் மீதும், உணர்ச்சிகள் மீதும் ஒரு பிரேமை இருக்கும்.

வாழ்க்கை உல்லாசமானது, கொண்டாட்டத்துக்கு உரியது என நம்புவார்கள். என்ன தான் எதிர்மறை அனுபவங்கள் நேர்ந்தாலும் ஆழ்மனது மீண்டும் மீண்டும் வாழ்க்கையை கொண்டாடுவதையே ஏற்கும். அதனால் அப்படியான புத்தகங்களையே தேடுவர்.

எனக்கு சிறுவயது முதலே மனிதன் அடிப்படையில் தீமையானவன் என்கிற கருத்து பிடிக்கும். அதனாலே யாரும் பரிந்துரைக்காமலே தாக்கரே எனும்



எழுத்தாளரின் Vanity Fair எனும் நாவலை ரசித்து படித்தேன். அந்நாவலில் முழுக்க பலவகை மனிதர்களின் பாசாங்கும் தீங்குகளும் தான் விவரிக்கப்பட்டிருக்கும். அதே வயதில் அகிலனின் சித்திரப்பாவையும் பிடித்திருந்தது.

தரம் என்பதை இப்படி நம் நம்பிக்கைகள் அல்லது வாழ்க்கை தத்துவம் என்பவற்றைப் பொறுத்துதான் தீர்மானிக்கிறோம். புத்தகங்களைத் தேடி வாசிக்க நேரமில்லை என்பவர்கள் தன்னை அறிய நேரமில்லாதவர்களே.

ஒவ்வொரு சிறந்த புத்தகமும் அது உருவாகிற சிந்தனைப் பரப்பின் ஒரு பகுதி. அந்த சிந்தனைத் தளம் உங்களுக்கு பரிச்சயமாக அல்லாத பட்சத்தில் உங்களுக்கு அந்த நூல் புரியாது.

உதாரணமாக நீட்சேவின் இவ்வாறு சொன்னான் ஜராதுஷ்டிரனை எடுப்போம். இது ஒரு பிரபல நூல். தமிழில் வெளியானது முதல் பதிப்பு வேகமாய் விற்று முடிந்ததாய் சொன்னார்கள். எனக்கு வியப்பாக இருந்தது. ஏனென்றால் மேற்கத்திய தத்துவ வரலாற்றில் ஒரு மைல்கல் அந்த நூல். அதுவரையிலான பல முக்கிய தத்துவஞானிகளுக்கான தன் பதிலை நீட்சே அந்நூலில் வைத்திருப்பார். அந்த தத்துவவாதிகள் யாரென தெரியாமல், அந்த நூற்றாண்டுகளின் சிந்தனை தடம் என்னவென விளங்காமல் உங்களுக்கு ஜராதுஷ்டிரனின் கதையும் புரியாது. கருத்துக்களும் விளங்காது. வேகமாய் வாசித்து விட்டாலும் அது நுனிப்புல் மேய்தலாகவே இருக்கும்.

உள்ளே நுழைய அவ்வளவு சிரமமான புத்தகம் அது.

கார்ல் யுங் எனும் உளவியல் ஆய்வாளர், பிராய்டின் மாணவர், ஜராதுஷ்டிரன் நூல் பற்றி பத்து வருடங்கள் தொடர்ந்து கருத்தரங்கு கள் நடத்தினார். கருத்தரங்க உரைகளை 1000 பக்கம் வருகிற இரு தொகுதிகளாய் வெளியிட்டார். பத்து வருடங்கள் பேச வேண்டிய நூலை எந்த மேற்கத்திய தத்துவ அறிமுகம் அற்ற தமிழ் வாசகர்கள் பத்து நாளில் வாசித்து முடித்து விட்டார்களா?

இது உண்மையில் ஒரு அபத்தம். நடக்கத் தெரியாதவன் ஓடுவது போன்றது இது தமிழில் என்ன நடந்தது என்றால் நீட்சே எனும் கவர்ச்சியான பெயர் காரணமாக அந்நூல் வேகமாய் விலை போனது. வாங்கியவர்கள் அவசரமாய் படித்து அதை ஒரு கதை அல்லது கவித்துவமான விவரணை என்கிற அளவில் புரிந்து கொண்டு முடி வைத்தனர். பெரும்பாலானோருக்கு புரியவில்லை ஆனால் நீட்சே வாசித்ததாய் பாசாங்கான திருப்தி மட்டும் அடைந்தனர். இந்நூல் ஆங்கிலத்தில் உருவாக்கிய விவாதங்களில் நூற்றில் ஒரு பகுதி கூட தமிழில் நிகழவில்லை. ஏனென்றால் நாம் அந்நூலுக்கு இங்கு தயாராகி இருக்கவில்லை. எந்தப் புத்தகத்தையும் அந் தரத்தில் இருந்து கொய்யாக்காய் பறிப்பது போல் எடுத்து வாசிக்க முடியாது. அதற்கு ஒரு தொடர்ச்சி வேண்டும். தொடர்ச்சி அமைய நம் தனிப்பட்ட ரசனை அல்லது தேடல் காரணமாய் நாம் அந்த தளத்தில் பல நூல்களை வாசித்திருக்க வேண்டும்.

# மூலிகை தேநீர்

இயற்கை வைத்தியம், இயற்கை உணவு, பாரம்பரிய யோகாசனம் கற்றல் என மக்கள் மாற ஆரம்பித்துவிட்டனர். அத்தகையவர்கள் பால், கோப்பித்தூள், தேயிலைத்தூள் கலவாத மூலிகைத் தேநீர் குடிப்பதால் உடலுக்கு நன்மை ஏற்படுவதுடன் செலவும் மிச்சமாகும்.

**செம்பருத்திப் பூ தேநீர்:** ஒற்றை செம்பருத்தி 4 பூக்களின் இதழ்களை மட்டும் (நடுவில் உள்ள மகரந்தத்தண்டு, சூல், இலையுடன் கூடிய காம்பு நீங்கலாக) போதுமான தண்ணீரில் போட்டு கொதிக்க வைக்க வேண்டும். நன்கு கொதி வந்த பின் இறக்கி வடிகட்டி அத்துடன் போதுமான எலுமிச்சம் பழச்சாறு கலந்து சுவைக்கு தக்கபடி வெல்லம் சேர்த்து அருந்தலாம்.

**ஆவாரம் பூ தேநீர்:** காம்பு நீக்கிய ஆவாரம் பூக்களை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி எலுமிச்சம் சாறு, வெல்லம் அல்லது சர்க்கரை தேவைக்கு கலந்து அருந்தலாம்.




**கொய்யா இலை தேநீர்:** கொய்யா மரத்துளிரை தண்ணீரில் கொதிக்க வைத்து வடிகட்டி அத்துடன் ஏலக்காய், வெல்லம் சேர்த்து பருகலாம்.

**முருங்கைக் கீரை தேநீர்:** முருங்கை இலை, எலுமிச்சம் பழ மர இலை இரண்டையும் சேர்த்து தண்ணீரில் கொதிக்க வைத்து வடிகட்டி எலுமிச்சம் சாறு, வெல்லம் கலந்து பருகலாம்.

**துளசி இலை தேநீர்:** துளசி இலையை சிறிது தண்ணீரில் கொதிக்க வைத்து வடிகட்டி ஏலத்தூள், வெல்லம் அல்லது நாட்டு சர்க்கரை சேர்த்து பயன்படுத்தலாம்.

**கொத்துமல்லி தேநீர்:** கொத்துமல்லி தழையை சிறிதளவு தண்ணீரில் கொதிக்க வைத்து, அத்துடன் சுக்குத் தூள், வெல்லம் பனங்கட்டி கலந்து பருகலாம்.

(வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் நூலிலிருந்து...)



புதுவருட தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி சிவில் பாதுகாப்பு திணைக்களம் வறிய நிலையிலுள்ள மாணவர்கள் மற்றும் மருத்துவ தேவையுடையோருக்கு உதவிகளை வழங்கியது. திணைக்கள அதிகாரிகள் மாணவர்களுக்கும் தாய்மாருக்கும் உதவிகளை வழங்கிவைப்பதைக்காணலாம். (77)

# கசிப்பு நடவடிக்கைகள் அதிகரிப்பு கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் அதிகரித்துள்ள கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கையால் சமூக விரோதச் செயல்கள், வன்முறைகள் துஷ்பிரயோகம் என்பன அதிகரித்துள்ளதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கடந்த சிலமாதங்களாக தொடர்ச்சியாக இப்பிரதேசத்தில் கசிப்பு நடவடிக்கைகள் அதிகரித்துள்ள நிலையில் கசிப்பை அருந்தும் நபர்கள் குடும்ப வன்முறைகளில் மற் றும் சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

குறிப்பாக பிரமந்தனாறு, புன்னை நீராவி, கோரக்கன்கட்டு பரந்தன், ஊரியான் ஆகிய பகுதிகளில கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்துள்ளதாகவும் இதில் குடும்பத்தவர்கள் ஈடுபடுவதால் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கும் இப்பகுதி மக்கள் இதனால் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை கசிப்பை அருந்தும் இளைஞர்கள் இரவு வேளைகளில் வீதியால் செல்வோரிடம் தவறாக நடந்து கொள்வதாகவும் தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துவதாகவும் இதனால் வீதியால் செல்வோர் அச்சத்துடன் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சமூக விரோத செயறபாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் கசிப்பு நடவடிக்கைகளை முற்றாக ஒழிக்க பொலிஸாரும் கிராம மட்ட அமைப்புக்களும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# விளையாட்டுப்போட்டிகளும் பொங்கல் விழாவும்

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டுபாரம்பரிய விளையாட்டுப் போட்டியும், பொங்கல் விழாவும் நடாத்தப்படவுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை ஆண்களுக்கான மரதன்ஓட்டப் போட்டியும் பொங்கல் தினத்தன்று இளவாலை வலித்தூண்டல் கடற்கரை பகுதியில் பட்டம் விடும் போட்டியும் நடைபெறவுள்ளன.

மேலும் பொங்கல் தினத்தன்று பிற்பகல் 2 மணிமுதல் பாரம்பரிய போட்டிகளான சறுக்குமரம் ஏறுதல், கயிறு இழுத்தல், தலையணைச் சண்டை, தயிர்முட்டி உடைத்தல், போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளதுடன் மாலை கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத்தூதுவர் நடராஜன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை பிரதேச செயலர் எஸ். ஸ்ரீமோகனனு், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் முரளிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# மதம் மாற்றம் செய்வதில்லை

## – அருட்திரு.றொஷான் தெரிவிப்பு

நிர்ப்பந்த மதமாற்றத்தை தடுத்து நிறுத்துமாறு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை விஜயத்தின்போது கோரவுள்ளதாக சைவத்தமிழ், இந்து சிவில் சமூகம் வெளியிட்ட பத்திரிகை செய்தி பற்றி வினவியபோது அருட்திரு. றொஷான் அடிகளார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது, இலங்கை கத்தோலிக்க மதத்தினர் நிர்ப்பந்த அடிப்படையில் மதமாற்றத்தில் ஈடுபடுவதில்லை. போர்காலத்திலோ போரின் பிற்பட்ட காலத்திலோ கத்தோலிக்க மறையினர் இன, மத, சாதி பேதமின்றியே செயற்பட்டு வந்துள்ளனர். கத்தோலிக்க மறையின் தொண்டு நிறுவனங்களாகிய செடக், கியூடெக் கரித்தாஸ் என்பன பலர் போற்றும் வகையில் பெரும் அளவில் மக்கள் துயர் துடைப்பில் பங்கேற்றன. இவை ஒரு போதும் எச்சந்தர்ப்பத்திலும் தமது துயர் துடைப்புப் பணிகள், வாழ்வாதார உதவிகளின் போது மத மாற்ற செயற்பாடுகளில் ஈடுபடவில்லை என உறுதியாகக் கூறுமுடியும். கத்தோலிக்க மறையினர் இடர்படும் மக்களின் உரிமைக் குரலாக இருந்தனரே தவிர தமது செயற்பாடுகளின் பின்னணியில் மதமாற்ற எண்ணத்தை கொண்டிருக்கவில்லை.

மாறாக கிறிஸ்தவ அடிப்படைவாத சபையினர் சிலர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது வருத்தத்திற்குரியது. இவர்கள் இந்து மத சகோதரர்களை மட்டும் அல்ல, கத்தோலிக்க சமயத்தவரையும் தம் பக்கம் ஈர்த்து இழுக்க முனைகின்றனர்.

இத்தகையோரின் செயற்பாடுகளைப்பின்புலமாகக் கொண்டு கத்தோலிக்க மறையின் தலைமை ஆயர் திருத்தந்தை பிரான்ஸிஸ் அவர்களின் இலங்கை விஜயத்தின் போது நிர்ப்பந்த மதமாற்றத்தை தடுக்குமாறு ஓர் கோரிக்கையை முன்வைப்பது பொருத்தமற்ற செயற்பாடே என்றார் பாதுகாவலன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அருட்திரு. றொஷான் அடிகளார்.

# பூவரசங்குள குடியிருப்பு வீதி புனரமைப்பில் மக்கள் மகிழ்ச்சி

(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பூவரசங்குள குடியிருப்பு வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருவதால் தாம் இலகுவான போக்குவரத்தை இனி மேற்கொள்ள முடியுமென இப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

இவ்வீதி 95 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் இதனால் கனரக வாகனங்களின் போக்குவரத்து இலகுவாக இடம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் இவ்வீதி குண்டும் குழியுமாக காணப்பட்டதுடன் போக்குவரத்துக்கு உதவாத நிலையில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

குறிப்பாக இவ் வீதியூடாக பாடசாலைமாணவர்கள்,விவசாயிகள், வர்த்தகர்கள், அரச அலுவலர்கள் எனப் பலர் பயணத்தை சிரமத்தின் மத்தியிலே மேற்கொண்டு வந்தனர். தற்போது இவ்வீதி புனரமைக்கப்படுவதால் சிரமமற்ற போக்கு வரத்தை தாம் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

# நெருக்கடிக்கு மத்தியில் நல்லூர் உப தபாலகம்

## கவலை தெரிவிக்கின்றனர் மக்கள்

நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கு அண்மித்ததாகவுள்ள நல்லூர் உபதபாலகம் இடவசதிகளின்றி பல நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கிவருகின்றது. முன்னர் பல வருடங்களாக இதே இடத்தில் இயங்கிய இந்த தபாலகம் பின்னர் சில ஆண்டுகளாக நல்லூர் செங்குந்தா சந்தையின் பின் பக்கமாக இயங்கியது. ஆனால் மீண்டும் தற்போது பழைய இடத்துக்கே வந்துள்ளது என தெரிவிககப்படுகின்றது.

உபதபாலகம் இயங்கிவரும் இச் சிறிய கட்டடம் இடவசதி குறைநததாகும். அது மட்டுமன்றி முன்வாயில் பக்கத்தில் ஒரு சிலர் மட்டுமே நிற்பதற்கு முடியும். ஆனால் அதிகளவிலான மக்கள் தமது தேவையின் பொருட்டு இங்கு வந்தால் அவர்கள் வீதியில் தான் நிற்கவேண்டிய அவல நிலை காணப்படுகின்றது.

எனவே இந்த உப தபாலகம் மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றப் பொருத்தமான வகையில் அமைவதற்கு ஏற்ற வகையில் வசதிகளுடன் கூடிய இடமொன்று வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# செம்மணி இந்துமயானத்தில் மின் உலை அமைக்கப்படவில்லை

(திருநெல்வெலி)

செம்மணி இந்து மயானத்தில் மின் உலை அமைப்பதற்கான அத்திபாரக் கல் நாட்டப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இம் மின் உலை உருவாக்கப்படுவதற்கான எந்த விதமான ஏற்பாடுகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என மக்களால் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஒரு கோடியே எழுபதினாயிரம் ரூபா செலவில் இரண்டு வருட காலத்துக்குள் இம்மின் உலை அமைக்கப்படும் என அப்போது செம்மணி இந்து மயான அபிவிருத்தி சபையினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றைய நிலையில் மின் உலை அமைப்பதற்கு மூன்று கோடி ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதால் இதனைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேநேரம், மயானத்தின் சுற்று மதில் கட்டுவதற்காக நாற்பது இலட்சம் ரூபா பணம் அபிவிருத்தி சபையினால் செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் நிழல்தரும் மரங்களை மயானத்துக்குள் நாட்டிய யாழ்ப்பாணம் தியாகி அறக்கொடை நிலையம், அவற்றைப்பராமரிப்பதற்கென நாற்பதாயிரம் ரூபாவை அண்மையில் செம்மணி மயான அபிவிருத்திச் சபைத் தலைவரிடம் கையளித்திருந்தது. (137)

# விபரம் திரட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மிகவும் சேதமடைந்து காணப்படுகின்ற வீதிகள், மதகுகள், பாலங்கள் போன்றவற்றின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

அண்மையில் தொடர்ச்சியாக பெய்த மழை வெள்ளத்தின் காரணமாக வீதிகள், பாலங்கள் என்பன சேதமடைந்து காணப்படுகின்றன.

எனவே இவ்வாறு சேதமடைந்து காணப்படும் வீதிகள், மதகுகள், பாலங்களின் விபரங்களை உடனடியாக திரட்டி அனுப்பி வைக்குமாறு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# வீதியின் நடுவே சுற்றுவட்டம் இல்லை; விபத்து ஏற்படுவதாக விசனம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சந்தியில் வீதி சுற்றுவட்டம் இன்மையால் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுவதாக பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர். மானிப்பாய் சந்தியில் காணப்பட்ட சுற்றுவட்டம் கடந்த வருட நடுப்பகுதி சிதைவடைந்த நிலையில் பின்னர் முற்றாக அகற்றப்பட்டது. சுற்றுவட்டப்பகுதி இருந்த இடத்தில் வீதியின் நடுவே சிறிய தடி ஒன்றில் கொடி ஒன்று கட்டப்பட்டு அது சுற்றுவட்டமாக கருதப்பட்டு வீதி ஒழுங்கு பேணப்பட்டது.

தற்போது குறித்த தடி, கொடி என்பன அகற்றப்பட்ட நிலையில் குறித்த சந்தியில் வீதிப்போக்குவரத்து வீதி ஒழுங்கு விதிகளை மீறி பெற்று இடம்பெறுவதால் அடிக்கடி விபத்துக்கள் நடைபெற்று வருவதாகவும் இதனால் பயணிகள், மற்றும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உரிய அதிகாரிகள் குறித்த விடயத்தில் கவனமெடுத்து சுற்றுவட்டம் விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (66)

# தேர்தல் கடமையாற்றிய அதிகாரிகளுக்கு அரசாங்க அதிபர் நன்றி தெரிவிப்பு

தேர்ரதல் நடவடிக்கையின் போது கடமையாற்றிய அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக யாழ். தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான சுந்தரம் அருமைநாயகம் தொவித்துள்ளார்.

மேலும் தேர்தல் நடவடிக்கைகளின் போது பொறுப்பு வாய்ந்த கடமையானது சிரோஷ்ட தலைமை அலுவலரது கடமையாகும்.(spo)

இக்கடமையினை யாழ் மாவட்டத்தில் உள்ள சகல சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களும் பொறுப்புடன் செய்துள்ளனர் என்றார்.

மேலும் ஜனாதிபதி தேர்தல் தினத்திற்கு முதல் நான் சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கு அவர்களது கடமை தொடர்பில் முழுமையாக விளககியிருந்தேன்.

அதுபோல் தேர்தல் தினத்தில் வாக்கெடுப்பு நிலையத்தில் கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், கிராம அலுவலர் எழுதுநர், பொலிசாருடன் இணைந்த வகையில் பொதுமக்கள் வாக்களித்து சேவை நிறைவு பெற்றுள்ளது.

இதில் சரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரின் பொறுப்பு என்பது நேர்த்தியானதாக இருந்தது. அக்கட்மைப்பாட்டினை சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் நிறைவேற்றியுள்ளனர்.

இக் கடமைகளை முழுமையாக நிறைவேற்ற உதவிய யாழ். உதவி தெரிவத்தாட்சி அலுவலர் பொ.குகநாதன், முன்னாள் உதவி தேர்தல் ஆணையாளர் ரி.கிருஸ்ணானந்தலிக்கம் மற்றும் தேர்தல் அதிகாரிகள் அலுவலர்கள் அனைவருக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளார். (92)

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் பலி

தென்பகுதியில் உள்ள பிடிகல - வத்தஹேன சந்தி பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இது குறித்து பிடிகல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த 26 வயதான இளைஞர் ஒருவரே இதன்போது பலியாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.


கொலைக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பிடிகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# செழிப்பில் நெற் பயிர்கள்

நவாலி வடக்கு வயல்பகுதி மற்றும் இடிகுண்டுலயன் பகுதிகளில் விளைந்து காணப்படும் நெற் பயிர்களுக்கு வயல்களில் நீர் இல்லாமையின் அப்பகுதி விவசாயிகள் ஒன்றிணைந்து நவாலி இடி குண்டில் இருந்து நீரினை நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் வயல்பகுதிகளிற்கு இறைத்து வருவதை அவதா னிக்க முடிகின்றது.

இதனால் அப்பகுதி வயல் நிலங்களில் நீர் நிறைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (66)

# துரிதகதியில் நடைபெறும் சிவன் கோவில் முகப்பு வாயில்



(திருநெல்வேலி)

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் சட்டநாதர் சிவன் கோயிலின் முகப்பு வாயில் கோபுரம் துரித கதியில் கட்டப்பட்டு வருகிறது.

77அடி உயாரத்தில் 7 வாயில்களைக்கொண்ட இக்கோபுரம், நல்லூரை சேர்ந்த புலம் பெயர்ந்து வெளிநாட்டடில் வதியும் ஒருவரினால், அவரது சொந்தப் பணத்தில் கட்டப்பட்டுவருவதாகத் தொவிக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டு கோடி ரூபா இதற்கு செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (137)

# பதிவிறக்கப் பெட்டகம்

ஒன்பதாம் வகுப்பு படிக்கும் ஒரு மாணவனுக்கு படிக்க ஒரு புத்தகம் கொடுத்தேன். மாணவன் புத்தகத்தைத் திருப்பிக் கொடுககும்போது, "படித்துவிட்டாயா?" எனக் கேட்டேன். அதற்கு அவன், "நானும் என் அண்ணனும் படித்துவிட்டோம்" என்றான்.

"உன் அண்ணன் என்ன செய்கிறான்?"

"அவனும் என்னுடன் படிக்கிறான்"

"அது எப்படி அவனும் உன்னோடு படிக்க முடியும்? எந்த வகுபபிலாவது பெயிலாகிவிட்டானா?"

"பெயில் எல்லாம் ஆகவில்லை. அவன் என்னைவிட மூன்று மாதம் மூத்தவன்"

"அதெப்படி மூன்று மாதம் மூத்தவனாக உன் அண்ணன் இருக்க முடியும்?"

"இதென்ன கேள்வி... அவன் என் பெரியப்பா மகன்"

*** *** *** ***

"உனக்குக் குடிப்பழக்கம் இருக்கா?"

"இல்லை"

"புகை பிடிக்கிற பழக்கம்?"

"இல்லை"

"வெத்திலை பாக்கு புகையிலை?"

"இல்லவே இல்லைடா"

"அப்ப... நீ மனுஷனே இல்லை"

"என்னடா சொல்றாய்?"

"மனிதருள் மாணிக்கம் என்று சொல்ல வந்தேன்"

*** *** *** ***

ராஜா வேட்டைக்குக்கிளம்பினார். கூடவே சமையல்காரன். இரவு.

"அரசே... சமையலுக்கு உப்பில்லையே"

"சரி ஊருக்குள் சென்று விலை கொடுத்து வாங்கி வா"

"உப்பை இனாமாகத் தருவதற்கு நிறையப் பேர் இருக்கிறார்கள் அரசே. எதற்கு விலை கொடுக்க வேண்டும்?"

"உப்பை இனாமாக வாங்கினால் நாடே பாழாகிவிடும்"

"என்ன அரசே சொல்கிறீர்கள்?"

"ஒரு நாட்டின் அரசன் ஊர் மக்களிடம் உப்பை இனாமாக வாங்கினால்... அதிகாரிகள் அந்த ஊரையே இனாமாக வாங்கி விடுவார்கள்"

*** *** *** ***

வழக்கறிஞர்: நான் சொல்லிக் கொடுத்ததை அப்படியே சொல்லோணும்.

**கட்சிக்காரர்:** சரிங்க.

**வழக்கறிஞர்:** மறக்கக் கூடாது.

**கட்சிக்காரர்:** சரிங்க.

**வழக்கறிஞர்:** மறந்து போனால் என்ன செய்வாய்?

**கட்சிக்காரர்:** நீங்கள்தான் கோர்ட்டிலே இருப்பீங்களே... கேட்டுத் தெரிஞ்சுகொள்றேன்.

*** *** *** ***

நீதிபதி: அப்போ, மூன்று வருஷத்துக்குப் பிறகு, நேற்று நீ, உன் கணவனை சந்தித்தாயாக்கும்?

**பெண்:** ஆமாம் ஐயா.

**நீதிபதி:** அவன் என்ன சொன்னான்?

**பெண்:** நரகத்துக்குத் தொலைஞ்சு போ என்று சொன்னார் ஐயா.

**நீதிபதி:** நீ என்ன பண்ணினாய்?

**பெண் :** உடனே உங்களிட்டே வந்தேன் ஐயா!

*** *** *** ***

**முதல் திருடன்:** அந்த ஆளுக்கு காது கேட்காது என்பது தெரிஞ்சிருந்தா அவன் வீட்டுக்குத் திருடவே போயிருக்க மாட்டேன்.

**அடுத்தவன் :** ஏன்ரா? என்னாச்சு?

**முதல் திருடன்:** அலுமாரிச் சாவியை எடுடா என்று சொல்லி அவனுக்கு புரியவைக்கிறதுக்குள்ள அக்கம்பக்கத்தில இருந்தவர்கள் என்னைப் பிடிச்சிட்டாங்களே...

*** *** *** ***

ஒரு சிறுமி அழகான நாய் ஒன்றை வளர்த்து வந்தாள். அந்த நாய் நோய் தாக்கி ஒரு நாள் இறந்துவிட்டது. நாய் இறந்ததிலிருந்து மிகவும் சோகமாக இருந்தாள் அந்தச் சிறுமி.

சிறுமியின் அம்மா அவளை ஒரு மனநல மருத்துவரிடம் அழைதது்ச் சென்றாள்.

மனநல மருத்துவர் சிறுமியிடம், "இங்க பாரும்மா... என்னுடைய தாத்தா கூட செத்துப் போயிட்டார். நான் அழுகிறேனா? சாப்பிடாமல் இருக்கிறேனா?" என்று கேட்டார்.

அதற்கு அந்த சிறுமி சொன்னாள்:

"நான் சின்ன வயசிலே இருந்து நாயை வளர்த்தேன். நீங்கள் தாத்தாவை அப்படியா வளர்த்தீங்கள்?"

*** *** *** ***

ஒரு விண்ணப்பத்தில் கேட்கப்பட்டிருந்த கேள்வி:

அப்பாவின் வயது? (உயிருடனிருந்தால்)

**வந்த பதில்:** 120 வயது (உயிருடனிருந்தால்)

# மகிந்தாவுக்கு கௌரவம் என்றும் குன்றாமல் இருக்கும்

## பிரதமர் ரணில் சொல்கிறார்



(கொழும்பு)

"முப்பது வருட காலமாக நாட்டிலிருந்த கொடிய யுத்தத்தை இல்லாதொழித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எமது கௌரவம் என்றும் இருக்கும்" என்று புதிய பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தேர்தலுக்குப் பின்னரான காலங்களில் மக்கள் அமைதியாக செயற்பட வேண்டும் என்றும் மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

6 ஆவது நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்ற போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மைத்திரிபால சிறிசேனாவை ஜனாதிபதியாக்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மாற்றம் ஏற்பட்டு விட்டது. மஹிந்த ராஜபக்ஷவை நான் சந்தித்தேன். அப்போது அவர், மக்களின் முடிவை ஏகமனதாக ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார்.

30 வருடகாலமாக நாட்டை சீரழித்த யுத்தத்தை இல்லாதொழித்த மஹிந்த ராஜபக்ஷவுக்கு என்றுமே எமது கௌரவம் இருக்கும். எனினும், மக்கள் தற்போது மாற்றம் ஒன்றையே எதிர்ப்பார்க்கின்றனர்.

புதிய அரசியல் கலாசாரம் ஒன்று உருவாக வேண்டும் என்று நினைக்கின்றனர். அதற்கிணங்க, நாம் அவர்களின் எதிர்பார்ப்பை நிச்சயமாக பூர்த்தி செய்வோம். அதேநேரம், எந்தவொரு பிரஜையும் சட்டத்தை கையில் எடுக்கக் கூடாது என்றும் நாம் கேட்டுக் கொள்கிறோம். வெற்றி, தோல்வியை அமைதியான முறையிலேயே எதிர்கொள்ளவேண்டும். இதனை மீறுவோருக்கு எதிராக பொலிஸார் கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றார்.

# பட்டுப்பாதை திட்டத்துக்கு ஆட்சி மாற்றத்தால் ஆப்பு

## 'குவார்ட்' சஞ்சிகை கருத்து

(கொழும்பு)

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவுசெய்யப்பட்டுள்ளமை சீனாவின் வெளிவிவகாரக் கொள்கைக்கு அவசியமான முக்கியமான, விடயமொன்றை அழித்து விட்டதாக சர்வதேச சஞ்சிகையொன்று கருத்து வெளியிட்டுள்ளது.

குவார்ட்ஸ் எனும் அந்த சஞ்சிகை மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கையில் நடைபெற்றுள்ள இந்த தேர்தலுடன் சீனாவின் புதியபட்டுப்பாதை திட்டம், வரைபடத்திலிருந்தே அகற்றப்பட்டு விட்டது. சிறிசேனா சீனாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் போர்ட் சிட்டி திட்டத்தை இரத்துச்செய்யப்போவதாக தெரிவித்துள்ளார்.


அவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இவை குறித்து எதனையும் குறிப்பிடாவிட்டாலும் வெளிநாட்டு கடன்களினால் உண்டாக கூடிய தீமை குறித்து தெரிவித்திருந்தார்.

சிறிசேனா ஆசியாவின் ஏனைய அயல்நாடுகளுடனும் சமமான உறவை வளர்க்கப்போவதாக தெரிவித்திருந்தார்.

இலங்கை, சீனாவிற்கு சமமாக ஏனைய நாடுகளை நடத்துமானால் அது சீனாவிற்கு பாரிய பின்னடைவாகவே அமையும் என அந்த சஞ்சிகை தெரிவித்துள்ளது.

# நாட்டின் சிறுபான்மையினரை மைத்திரி புறக்கணிக்கமாட்டார்

## வடக்கு முதலமைச்சர் நம்பிக்கை



புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறுபான்மையினரின் தேவைகளையும் நலன்களையும் புறக்கணிக்கமாட்டார் என்று நம்புவதாக, வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சீ.வி.விகனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

நல்லதொரு முடிவை தமிழ்பேசும் சகோதர சகோதரிகள் தேர்தலில் எடுத்துள்ளார்கள். இன்று நாங்கள் மனமுவந்து வாக்களித்து ஒரு புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்துள்ளோம்.

அவரின் கீழ் இந்த நாட்டில் உண்மையான ஜனநாயகம் நிலைநாட்டப்படும் என்று நான் முழுமையாக நம்புகின்றேன். அதுமட்டுமல்ல, அறுபது வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாதிருக்கும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு சுமூகமான தீர்வை எட்டுவதற்கான அத்திவாரம் நாட்டப்படும் என்றும் நம்புகின்றேன்.

அவருக்கு இது சார்பாக எங்கள் மக்களின் சகல ஒத்துழைப்புக்களும் உதவிகளும் அளிக்கப்படும் என்பதைக் கூறிக கொள்கின்றேன்.

ஒரு மண்ணின் மைந்தனான அவர் சிறுபான்மையினரின் தேவைகளையும் நலன்களையும் புறக்கணிக்கமாட்டார் என்று நாம் நம்பலாம்.

பல கடினமான கடப்பாடுகள் அவரைச் சார்ந்துள்ளன. அண்மைய காலங்களில் இயற்கை அனர்த்தங்களினால் இன்னல்கள் பலவற்றிற்கு ஆளாகியிருக்கும் வடக்கு, கிழக்கு மாகாண, மலையக மக்களின் வாழ்க்கையை சீரமைக்க வேண்டிய கடப்பாடு, மத தாக்கத்தால் மருண்டு போயிருந்த முஸ்லிம் மக்களை அணைத்தெடுத்துச் செல்ல வேண்டிய கடப்பாடு, போர்முடிந்தும் அளவுக்கதிகமான இராணுவப் பிரசன்னத்தினாலும் அவர்களின் உள்ளீடல்களாலும் அல்லலுறும் எமது வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரங்களையும் வாழ்க்கை நிலைகளையும் சீரமைத்து மாற்றியமைக்க வேண்டிய கடப்பாடு என்று பல கடமைகள் அவரைச் சார்ந்து நிற்கின்றன. அவர் அவை சம்பந்தமாகப் போதிய கவனம் செலுத்துவார் என்பதில் என் மனதில் சந்தேகம் இல்லை.

ஜனநாயகத்தை நிலைக்கச் செய்வதானால் பொறுமை, நம்பிக்கை, காருண்யமனோ நிலை யாவும் அவசியம். அவற்றை நாம் கடைப்பிடித்தே ஒரு ஜனநாயகப் புரட்சிக்கு வித்திட்டுள்ளோம். வருங்காலம் புதியதொரு சகாப்தத்தை உண்டுபண்ணட்டும். எமது தேவைகளை அறிந்து எமது மனோநிலைகளைப் புரிந்து நாட்டை ஆள்வோர் செயற்படட்டும்!

நாம் எமது கடமைகளைச் செய்து விட்டோம். பலவித அச்சுறுத்தல்கள், அல்லல்கள், அவலங்கள் மத்தியிலும் நாம் எமது கடமைகளைச் செய்து விட்டோம். புதிய தலைமைத்துவம் எம்மை வாழ வைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. நாம் எல்லோரும் மகிழ்வுடனும் சுதந்திரத்துடனும் போதிய உரிமைகளுடனும் தனித்துவத்துடனும் ஐக்கிய இலங்கையினுள் வாழ இறைவன் அருள் புரிவானாக என்றும் அவர் தெரிவித்தார்.

---

**தினமுரசுக்கு வந்த கடிதம்** தினமுரசு

வடக்கு உள்ளூராட்சியில்

# அரங்கேறிவரும் மோசடி - ஊழலுக்கு உடன் நடவடிக்கை எடுக்குக!

இலங்கையின் புதிய 7 ஆவது ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனா பதவியேற்றுள்ளார். அவரது கன்னி உரையில் பொருளாதார, அரச மற்றும் அரசியல் கொள்கைகளில் வினைத்திறனான மாற்றங்களைக் கொண்டு வருவதுடன் மக்களின் நலனில் கூடுதல் அக்கறை கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் பாரிய மாற்றங்கள் (gchanges) ஒவ்வொரு துறையிலும் ஏற்படவாய்ப்புள்ளது.

இவ் மாற்றங்கள் உடனடியாக 100 நாள் வேலைத்திட்டத்தில் முன்வைக்கப்பட்டு "நல்லாட்சி" (Good Governance) இடம் பெற வேண்டும் என்பதனையே எல்லோரும் எதிர்பார்க்கின்றனர்.

கற்றறிந்த சமூகம் ஒன்றின் ஊடாக பாமர மக்களும், ஏனைய அரசின் மக்களும் நன்மை அடைந்து வாழவேண்டும். என்பதே மாற்றத்தின் வெளிப்பாடு, பொது நியதி என்பதுமாகும்.

இதன் ஊடாக ஒவ்வொருவர் வாழ்விலும் மறுமலர்ச்சி ஏற்படவேண்டும். இவ்வாறான பழமுறை மாற்றங்கள் புதிய அரசின் ஊடாக இடம்பெறவேண்டும் என நினைத்துள்ளார்கள் மக்கள்.

இதன் ஒரு அங்கமாக வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் கீழ் மட்டத்தில் இருந்து உயர்மட்டம் வரை ஒரு கணம் அரசாங்க கடமை தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டிய நிலையில் மக்களும், அரசும் உள்ளனர்.

அதேவேளை கௌரவ சபை உறுப்பினர்களாகிய நாமும் சிந்திக்க வேண்டும்.

இன்று உள்ளூராட்சி சபைகளில் தலைவர்களின் கீழ் அலுவலர்கள் உள்ளனர். இதில் குறிப்பிடக்கூடிய உத்தியோகத்தர் வரிசையில் தொழில்நுட்ப அலுவலர்களை (to) முதலில் எடுத்துக் கொண்டால் நேர்மையும் மதிநுட்பமும் தொழில் நுட்பமும் தெரிந்த அலுவர்களை முதலில் விலக்குவோம்.

80 வீதமான வடக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் முற்றிலும் நேர்மையிழந்து ஒப்பந்தகாரர்களாகவும், மதிப்பீட்டில் மாறுபட்ட விலைகளையும், ஒப்பந்த காரர்களது கடிதத்தலைப்புக்களையும் தாமே எழுதி அவர்களது கையொப்பங்களை இடுபவர்களாகவே உள்ளனர்.

சில தொழில்நுட்ப அலுவலர்கள் தலைவர் செயலாளர்களை ஏமாற்றி கூடிய விதத்தில் தமது நலன்களை மையப்படுத்தி காயை இலகுவாக நகர்த்தி வருகின்றனர்.

வேறு சில தொழில்நுட்ப அலுவலர்கள் சபைக்கு வந்து கையொப்பம் இட்டுவிட்டு கோயில்களிலும் குளங்களிலும் அடாவடி செய்கின்றனர். மாதாந்த வேதனங்களை ஒழுங்காக பெறுகின்றனர்.

இன்னும் சிலர் மதுபோதையில் மிதக்கின்றனர். வேறு சிலர் கடமைக்கு செல்லாது விடுமுறை கொடுப்பனவுகளை பெற்று பங்கு போட்டுக்கொள்கின்றனர்.

வேறும் சிலர் முழுமையாக ஒப்பந்தகாரர்களாக செயற்படுகின்றனர். சிலர் ஊழல்களைப் புரிந்துகொண்டு மேலதிகாரிகளையும் திருப்திப்படுத்தி சுயநன்மையுடன் நிதி பெருக்கி வாழுகின்றனர்.

இவ்வாறானவர்களை ஏன் வடக்கு மாகாண முதலமைச்சர், ஆளுநர், இனம்காண முடியாதுள்ளனர். மௌனிகளாக உள்ளனர்.

தொழில்நுட்ப அலுவலர்களை மூன்று வருடத்திற்கு ஒரு சேவை நிலையம் (3 years) என உடன் மாற்றம் செய்யவேண்டும்.

இல்லாது விடில் நிதி மோசடி, சொந்த ஒப்பந்த செயற்பாடு, கடமை நேரத்தில் மது, கடமைக்கு செல்லாது வருமானம் ஈட்டல் போன்ற செயற்பாடுகள் தொடரவாய்ப்புண்டு. இதனை கண்காணிக்கவேண்டும்.

வேறு சில இடங்களில் உள்ளூராட்சி சபைகளில் முகாமை அலுவலர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 5 வருடம் முடிவடைந்த பின்னர் இடமாற்றம் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால் வடமாகாணத்தில் 10 வருடங்களுக்கு மேலாக இடமாற்றம் பெறாத முகாமைத்துவ உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடமை செய்கின்றனர். இவர்களுடன் இணைந்த வகையில் ஊழல் தாண்டவம் ஆடுகின்றது.

எனவே வடக்கிவ் உள்ளூராட்சிக்கு பொறுப்புவாய்ந்த அமைச்சர் க.வி.விக்கிணேஸ்வரன் அவர்கள் விழித்தெழவேண்டும்.


வடக்கில் சிறந்த நிர்வாக உள்ளூராட்சி கட்டமைப்பை முன்வைக்கவேண்டும்.


முழுமையான இடமாற்றங்களை சகல அட்டவணைப்படுத்தப்பட்ட மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத அலுவர்களுக்கு மாற்ற வேண்டும், இவற்றை விட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும், வடக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவாகத்திலும் இடமாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

இல்லாதுவிடில் மாற்றம் பெற்ற அரசும் விரைவில் மக்கள் முன்செயல் இழக்கும். பொறுத்திருந்து பார்ப்போம்.

நன்றி.

-கௌரவ சபை
உறுப்பினர்
தென்மராட்சி.

5. 
இச்சதுரமுகியின் மேற்பரப்பின் மீது கூம்பகம் ஒன்று பொருத்தப்பட்டதன் பின் தோன்றும் திண்மத்தின் விளிம்புகளின் எண்ணிக்கை யாது?
...............................................

6. 
பென்சிலின் நீளத்தை காண்க ...............................

7. 27kg 800g தேயிலையில் இருந்து 17kg தேயிலை விற்கப்பட்டதன் பின்னர் எஞ்சியிருக்கும் தேயிலையின் நிறை யாது?
...............................................

8. ஒரு நாளைக்கு காலையும், மதியமும், இரவும் 2 வீதம் மாத்திரைகள் வழங்கப்படும் ஒரு நோயாளிக்கு 36 மாத்திரைகள் எத்தனை நாட்களுக்கு போதுமானவை?
...............................................

9. ஒரு சதுரு வடிவ காணியில் நான்கு மூலைகளிலும் நான்கு தூண்கள் காணப்படும். அதேவேளை இரு தூண்களுக்கு இடையில் நான்கு தூண்கள் காணப்படுகின்றன. எனின் அச்சதுர காணியை சுற்றி எத்தனை தூண்கள் காணப்படும்?
...............................................

10. எண்கோலத்தை பூர்த்தி செய்க
1. 2, 4, 7, 11, 16, .........., ............
2. 5, 10, 20, 40 .........., ...............

11. கூட்டுக. $\frac{2}{4} + \frac{1}{8} = \square$

12. 30நிமிடத்திற்குள் 30km தூரம் செல்லும் ஜீப்வண்டி ஒன்று அதே வேகத்தில் 45km தூரத்தை சென்றடைய எடுக்கும் நேரம் எத்தனை மணித்தியாலயமாகும்?
...............................................

13. அண்மையில் வெளியிடப்பட்ட ரூபா 20.00 இல் காணப்படும் புள்ளிகளின் எண்ணிக்கை யாது?..............

14. 2லீற்றர் பாலை காய்ச்சும் போது 100ml பால் குறைவடையும் 6l பாலை காய்ச்சும் போது எத்தனை மில்லிலீற்றர் பால் குறைவடையும்?
...............................................

15. பெறுமானம் காண்க. 2250 + 150 + 90 + 09 = ...............................

(14) எனது வீட்டுத்தோட்டம் அழகானது என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுத்துப்பிழையின்றி எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்கள் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக அமைய வேண்டும்.
1...............................................
2...............................................
3...............................................

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1).III | (2).II | (3).I | (4).II | (5).I | (6).II | (7).II | (8).II | (9).III | (10).III |
| (11).III | (12).I | (13).I | (14).III | (15).I | (16).III | (17).IV | (18).I | (19).III | (20).I |
| (21).II | (22).III | (23.I | (24).I | (25).I | | | | | |

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



1 தொடக்கம் 14 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையை எழுதுக

(01) பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

மழையை பெறுவதற்கு மனிதனுக்கு காடுகள் அவசியமாக்கின்றன. விலங்குகள் உயிர் வாழ்வதற்கும் காடுகள் தேவைப்படுகின்றன. நாம் வாழும் சூழலில் காடுகள் முக்கிய அங்கமாக கருதப்படுகின்றன. குடைகள் போன்று விரிந்த நிலையில் காணப்படும் அடர்ந்த மரங்கள் நாளுக்கு நாள் அழிக்கப்படும் நிலைக் காரணமாக காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு மனிதர்கள் நீர்ப்பற்றாக்குறையை எதிர் நோக்குகின்றனர். காடுகளை அழிப்பது நம்மை நாமே அழித்துக்கொள்ளவதற்குச் சமமாகும்.

1. வனங்கள் என்ற சொல்லுக்கு ஒத்தகருத்தை தருக? ...............................
2. குடைகள் போன்ற விரிந்த நிலையில் காணப்படுபவை எவை?...............................
3. ஆக்குவது என்ற சொல்லிற்கான எதிர்ச்சொல்லை தருக? ...............................
4. பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைத்தொடரை குறிப்பிடுக? ...............................
5. காடுகளினால் நாம் அடையும் பயன்கள் இரண்டு தருக? ...............................
6. காடுகளை அழிப்பதால் நடைபெறும் விபரீதம் என்ன? ...............................

(02) பின்வரும் சொற்களில் உள்ள உயிர்க்குறிகளை இனங்கண்டு எழுதுக

1. பேதம் ............................... 02. சூழல்...............................
3. குதூகலம் ............................... 04. நுணுக்கம்...............................

(03) இடைவெளி நிரப்புக

1. குரங்கு மந்தி எனின் மயில் ............................... (போத்து, அளகு)
2. குதிரை குண்டு எனின் மான் ............................... (கலை, பிணை)
3. சிறுத்தை உறுமும் எனின் எருமை ............................... (முக்காரமிடும், எக்காளமிடும்)
4. தென்னை பிள்ளை எனின் மூங்கில் ............................... (நுங்கு, கன்று)

(04) கருத்தினை எழுதுக

1. நாக்குப்புரளுதல் ............................... 2. சிட்டாய்ப்பறத்தல் ...............

(05) பழமொழிகளின் பொருளை தருக

1. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் ...............................
2. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் ...............................

(06) பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக

1. தினைத் ............................... நன்றி செய்யினும் ...............த் துணையாகக் கொள்வர் ............... தெரிவார்
2. தசரத மன்னனின் மூத்த மனைவி ............................... ஆவார்

(07) ஒலிவேறுபாடுடைய எழுத்துக்களை கொண்ட சொற்களை பூரணப்படுத்துக

1. த ...... டணை 2. உ..... சாகம் 3. சார......ம் 4. பன்.....ரி
5. வே.......பாளர் 6. பா.......ம்

(08) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக

1. நாம் பாடசாலைக்குச் செல்வோம் ....................

2. தயவு செய்து நன்றாக படிக்கவும் ....................

(09) கருத்தினை தமிழில் எழுதுக

1. please cross the road careful ....................

2. Elephant ....................

(10) சிங்கள கருத்தினை தமிழில் எழுதுக

1. உங்கள் பாடசாலை எங்கே இருக்கின்றது? ....................

2. அம்மா வந்தாரா? ....................

(11) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக

1. இலங்கைக்கே உரித்தான மீன் இனங்களில் ஒன்று
   1) மஞ்சள் கொண்டை 2) நிலத்திமிங்கலம் 3) விலாங்கு 4) அழகிய சொர்க்கம்

2. சூழலில் வெப்பநிலை அதிகரிக்கின்ற போது வெளிப்படும் விலங்கின் துலங்கல்,
   1) காகம் கரைந்த படி பறத்தல் 2) எறும்புகள் புற்றில் இருந்து வெளியேறும்
   3) நுளம்புகள் சூழலில் பெருகும் 4) தவளை நீருக்குள் பாயும்

3. நீரின் மீது பனிக்கட்டி மிதப்பதற்கு காரணம்
   1) நீரின் அடர்த்தி குறைவாகும். பனிக்கட்டியின் அடர்த்தி அதிகமாகும்
   2) நீரின் அடர்த்தி அதிகம் பனிக்கட்டியின் அடர்த்தி குறைவாகும்
   3) நீர் திரவமாகும். பனிக்கட்டி திண்மமாகும் என்பதால்
   4) நீரானது குறைந்த வெப்பநிலையில் திண்மமாக மாறியதாகும்

4. நீரிழிவு நோய் ஏற்பட்ட ஒருவர் அதிகளவு உட்கொள்ள வேண்டிய உணவு எது?
   1) உருளைக்கிழங்கு 2) பருப்பு 3) சீனி 4) பப்பாசி

5. அதிகளவு மின்சாரம் தேவைப்படும் உபகரணம் எது?
   1) வானொலி 2) தொலைக்காட்சி 3) மின்அழுத்தி 4) மின்விசிறி

6. காயவைத்து, தேனிலிட்டு பாதுகாக்கக் கூடிய உணவு எது?
   1) எலுமிச்சை 2) இஞ்சி 3) இறைச்சி 4) பலாவித்து


7. மரக்கறி வகைகளில் போசணைதன்மை குறையாதவாறு சமையல் செய்யும் முறைகளில் ஒன்று
   1) ஆழமான எண்ணெயில் பொரித்தல் 2) அரை அவியலில் சமைத்தல்
   3) குறைந்த எண்ணெய்யில் பொரித்தல் 4) நீண்ட நேரம் சமைத்தல்

8. என்புருக்கி நோய் ஏற்பட காரணம் யாது?
   1) அயடீன் குறைபாடு 2) விற்றமின் D குறைபாடு 3) இரும்பு குறைபாடு 4) விற்றமின் C குறைபாடு

9. பின்வருவனவற்றுள் நீர் தாவரம் எது?
   1) சல்ஜீனியா 2) துரோசிரா 3) யூற்றிக்குளோரியா 4) நெப்பந்திக்

10. 
   இவ்வுருவானது
   1) இலங்கை மின்சாரசபை 2) எரிபொருள் நிரப்பு நிலையம்
   3) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 4) மின்விநியோகிக்கும் இடம்

11. 
   இவ்வுருவில் உள்ள சமிக்ஞை குறிப்பது
   1) முன்னால் பாதை வேலை 2) முன்னால் ஒடுக்கமான பாலம்
   3) முன்னால் பாதசாரி கடவை 4) ஓடத்துறை முன்னால்




12.1. நீர்கொழும்பு கடலில் விழும் நதி எது?
   1) A 2) B 3) D 4) C

2. எந்த நதியின் கிளையின் ஒரு பகுதி கொட்டியார குடாவுடன் கலக்கின்றது?
   1) D 2) B 3) A 4) C

13. A - 9 பாதை எங்கிருந்து எங்கு வரையானது?
   1) கொழும்பு - கண்டி 2) கண்டி - யாழ்ப்பாணம்
   3) கொழும்பு - யாழ்ப்பாணம் 4) கண்டி - திருகோணமலை


14. குளத்து நீர் கால்வாய் ஊடாக வெளியேறும் இடம் எது?
   1) வான்கதவு 2) மடைக்கதவு 3) வாய்க்கால் 4) கலிங்கல்

15. இலங்கையின் புராதன தலைநகரங்களில் முதன்மை பெற்றது?
   1) பொலன்நறுவை 2) அனுராதபுரம் 3) கோட்டை 4) உருகுணை


16. இலங்கையின் நீர் வீழ்ச்சிகளில் ஒன்று
   1) டெவோன் 2) விக்டோரியா 3) ரந்தனிகல 4) பொல்கொல்ல

17. புகையிரத பாதையை குறிக்கும் குறியீட்டு வடிவம் எது?


1) +-+-+-+- 2) +=+=+=+= 3) ———— 4) ┼┼┼┼┼┼

18. 
   இவ்வுருவிலுள்ள தாவரம்
   1) ஆடாதோடை 2) ஆமணக்கு
   3) மரமஞ்சள் 4) திப்பிலி

(12) மின்குமிழ் ஒளிரும் முறையினை வயர்களால் இணைத்து காட்டுக




இருவயர் துண்டுகளை பயன்படுத்தவும்




மூன்றுவயர் துண்டுகளை பயன்படுத்தவும்

(13) கணித வினாக்களுக்கு விடை தருக




1. AB,BC,CD என்பவற்றின் மொத்த நீளம் 24cm ஆகும் எனின் ADயின் நீளம் யாது?
....................

2. பதினைந்தாயிரத்தி தொன்னூறொன்று என்பதை இலக்கத்தில் எழுதுக? ....................

3. 
   இக்கடிகார நேரம் பிற்பகல் நேரமாகும் இதனை நியமநேரத்தில் எழுதுக  [ : ]

4. 5 லீற்றர் மென்பானம் 25 பேரிடையே சமமாக பகிர்ந்தளிக்கப்பட்ட போது ஒருவருக்கு கிடைக்கும் பானத்தின் அளவு யாது?

....................

# 2 ஆவது இடத்தில் ஹோலி



ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் வீரர்கள் தரவரிசையை சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

இதில் இந்தியாவின் வீராட் ஹோலி இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.


அவுஸ்திரேலியாவிற்கு எதிராக சிறப்பாக விளையாடி வரும் வீராட் ஹோலி ஒருநாள் போட்டி துடுப்பாட்ட தரவரிசையில் 862 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளார்.

டி வில்லியர்ஸ் 25 புள்ளிகள் அதிகம் பெற்று முதல் இடத்தில் உள்ளார். இந்திய வீரர்கள் தவான் 777 புள்ளிகள் பெற்று 5-வது இடத்திலும், டோனி 10ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்து வீச்சில் மேற்கிந்திய தீவுகள் வீரர் சுனில் நரைன் 753 புள்ளிகள் பெற்று முதல் இடத்தில் உள்ளார். பாகிஸ்தான் வீரர் சயீத் அஜ்மல் 751 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்திலும், ஸ்டெய்ன் 699 புள்ளிகள் பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளனர். புவனேஸ்குமார் 8 ஆவது இடத்திலும், ஜடேஜா 9 ஆவது இடத்திலும் உள்ளனர். சகலதுறை தர வரிசையில் ஜடேஜா 6ஆவது இடத்தில் உள்ளார்.

அணிகளில் அவுஸ்திரேலியா முதல் இடத்திலும், இந்தியா 2 ஆவது இடத்திலும், தென் ஆபிரிக்கா 3ஆவது இடத்திலும் உள்ளது.

# இறுதிப்போட்டியில் ஷரபோவா - இவானோவிச்



(பிரிஸ்பேன்)

அவுஸ்ரேலியாவில் நடைபெறும் பிரிஸ்பேன் சரவதேச டென்னிஸ் போடடித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவாவுடன், செர்பிய வீராங்கனை அனா இவா னோவிச் மோதுகிறார். ஒற்றையர் பிரிவு அரை இறுதியில் எலினா ஸ்வி டோலினாவுடன் (உக்ரைன) நேற்றுமுன்தினம் மோதிய ஷரபோவா 61, 63 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரை இறுதியில் அமெரிக்காவின் வார்வரா லெப்சென்கோவை எதிர்கொண்ட இவானோவிச் 76 (72), 64 என்ற நேர் செட்களில் ஒரு மணி, 53 நிமிடம் போராடி வென்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றார். இதையடுத்து, இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் ஷரபோவா இவானோவிச் மோதுகின்றனர்.

மகளிர் இரட்டையர் பிரிவு அரை இறுதியில், இந்தியாவின் சானியா மிர்சா சூ வெய் சை (சீன தைபே) ஜோடி 64, 67 (17), 810 என்ற செட் கணக்கில் கரோலின் கார்சியா கடாரினா ஸ்ரெபோட்னிக் ஜோடியிடம் ஒரு மணி, 37 நிமிடம் போராடி தோற்று ஏமாற்றத்துடன் வெளியேறியது.

# பிராவோ பொல்லார்ட் நீக்கம்



11 ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் இருந்து மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னணி வீரர்களான பிராவோ, பொல்லார்ட் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

11 ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி பெப்ரவரி 11 ஆம் திகதி முதல் மார்ச் 29 ஆம் திகதி வரை அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது.

இந்த போட்டிக்கான 15 பேர் கொண்ட மேற்கிந்திய தீவுகள் அணி இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. "2015ஆம் ஆண்டு உலகக்கிண்ண போட்டிக்கான மேற்கிந்திய தீவுகள் அணியில் முன்னாள் அணித்தலைவர் வெய்ன் பிராவோ மற்றும் கீரன் பொல்லார்ட் ஆகியோர் இடம் பெறமாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தகவலை மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் வீரரும், வீரர்கள் சங்க முன்னாள் தலைவருமான ராம் நரைன் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

# அந்த 100 நாள் வேலைத்திட்டம்

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

70. அரசியல்மயமாகியுள்ள பொலிஸ் பதவி உயர்வு வழங்கும் முறையை நீக்கி வினைத்திறன், இயலுமை, திறமை, அர்ப்பணிப்பு மற்றும் செயற்பாட்டின் பிரகாரம் பதவிஉயர்வை வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்தல்.

71. உப பொலிஸ் சேவையின் அதிகாரிகள் சேவைக்கு உள்வாங்கப்படும் போது அதுவரை சேவையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளுக்கு ஏற்படும் பாதிப்பை நிறைவுசெய்தல் மற்றும். சேவையின் அதிகாரிகளின் சிரேஷ்டத்துவத்தை பாதுகாக்க தேவையான திட்டத்தை முன்னெடுத்தல்.

73. தோட்டப்புற மக்கள் தற்போது வாழும் வறுமையான லயன் அறை வாழ்க்கையிலிருந்து மீட்டு அவர்களுக்கு காணி உரிமையுடன் வீட்டு உரிமையை பெற்றுக் கொடுத்தல்.

74. பதுளை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, கேகாலை போன்ற மாவட்டங்களில் தோட்டப்புற மக்களின் பிள்ளைகளுக்கு தமிழ்மொழி மூலம் உயர் கல்வியை தொடரக் கூடிய வகையில் வசதியுடன் பாடசாலைகளை ஆரம்பித்தல்.

75. சட்டவிரோதமான முறையில் தமது வீடுகளில் மற்றும் காணிகளில் பல்வேறு காரணிகளுக்காக வெளியேற்றப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல்.

76. கொழும்பு நகரில் வீடு மற்றும் காணி அபகரிக்கப்பட்ட மக்களின் அச் சொத்தை மீள் மதிப்பீடு செய்து அதன பெறுமதிக்கு தற்போது வழங்கப்படும் வீட்டு கடனில் கழித்தல்.

77. வீட்டு வசதியின்றி வாழும் இலட்சக்கணக்கான மக்களுக்கு வீட்டு வசதி வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்தல்.

78. வடக்கிலும் தெற்கிலும் ஜனநாயக ரீதியான சிவில் நிர்வாகத்தை செயற்படுத்தல்.

79. மத ரீதியாக பாகுபாடுகள் மற்றும் மத ரீதியாக வன்முறைகளை கட்டுப்படுத்த சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல்.

80. மத வழிபாட்டு தலங்களுக்கு தேவையான காப்புறுதியினை வழங்குதல்.

81. மத ஒருமைப்பாட்டுக்காக செயற்படும் மற்றும் பிரிவினை வாதத்திற்கு எதிராக நேரடியாக நடவடிக்கை எடுக்கும் மதத் தலைவர்களை உள்ளடக்கிய பிரதேச மற்றும் தேசிய சபையை ஸ்தாபித்தல்.

82. தொல்பொருள் நிலையங்களை பாதுகாத்தலுக்கான வேலைத்திட்டத்தை ஆரம்பித்தல்.

83. ஸ்ரீ தலதா மாளிகை உள்ளிட்ட புண்ணிய பிரதேசங்களை அண்டிய பிரதேசத்தில் நடாத்தப்படும் மதுபானசாலைகளை அவ்விடத்தில் இருந்து அகற்றுவதுடன் அவ் புண்ணிய பூமியை சுற்றிகார் பந்தய போட்டி நடத்துவதை உடனடியாக நிறுத்துதல்.

84. திட்டமிடப்பட்டுள்ள பௌத்த விகாரை மற்றும் தேவாலய சட்டமூலத்தில் மாற்றத்தை கொண்டுவருதல்.

85. சம்பிரதாய பிரிவென கல்வியை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்துதலுக்காக மற்றும் அறிநெறிபாடசாலை ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக செயற்றிட்டங்களை ஆரம்பித்தல்.

86. சர்வதேச பௌத்த பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்கு தேவையான அடித்தளத்தை இடுதல்.

87. மிருகவதையை தடுப்பதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை.

88. பொருளாதார, சமூக அபிவிருத்தி, மனித உரிமை மற்றும் நல்லாட்சி போன்ற துறைகளுக்கு பொருத்தமான மக்கள் அமைப்புகளுக்கு தமது நடவடிக் கையை மேற்கொள்வதற்கு தற்போது உள்ள கட்டுப்பாட்டை அகற்றுதல்.

89. அனைத்து கலைஞர்களின் படைப்பை மதிக்கும் மற்றும் சுயாதீனத்துவத்தை பாதுகாக்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்தல்.

90. அனைத்து வெகுசன ஊடகவியலாளர்களின் மற்றும் நிறுவனங்களின் சுதந்தி ரத்தை பாதுகாக்கும் குறுகிய மற்றும் நீண்டகால வேலைத்திட்டத்தை ஆரம் பித்தல்.

91. கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை பாதுகாத்தல்.

92. நாடாளுமன்ற நிகழ்வுகளை நேரடியாக ஒளிபரப்பு செய்தல்.

93. சர்வதேச யுத்த குற்றச்சாட்டுக்கு நீதிமன்றம் உருவாக்கிய ரோம் ஒப்பந்தத்திற்கு இலங்கை கையெழுத்து இடாததனால் அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் ஏற்படுமாயின் அதனை தேசிய சுயாதீன நீதிமன்றத்தின் கீழ் மேற்கொள்ளுதல்.

94. முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா மற்றும் 43 ஆவது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க உள்ளிட்ட அரசியல் பழிவாங்கல் மற்றும் தண்டனைக்கு உள்ளானவர்களுக்கு பறிபோன பதவிகள் மற்றும் உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொடுத்தல்.

95. கௌரவமிக்க வெளிநாட்டு சேவையை மீண்டும் ஸ்தாபித்தல்.

96. தேசிய வனாந்தரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வனாந்தரங்களை பாதுகாத்தல் அதன் எல்லையை பாது காத்தல்.

97. அழிவடைந்து வரும் பிரதேசங்களை பாதுகாத்தல்.

98. அழிவடைந்து வரும் மற்றும் அழிவடைந்த பிரதேசங்களை பாதுகாக்க நவீன விஞ்ஞான முறைமைகளை பயன்படுத்தி அவற்றை மீண்டும் புனருத்தாரணம் செய்தல்.

99. மிருக சட்டமூலத்தை பயமின்றி மற்றும் கட்சிபேதமின்றி கடுமையாக நடைமுறைப்படுத்தல்.

100. அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் சுற்றாடல் பாதிப்பு தொடர்பாக முன்னுரிமை வழங்குதல்.

# இங்கிலாந்தில் தாக்குதல் நடாத்த திட்டம் வகுக்கிறது அல்கொய்தா

## உளவுத்துறை எச்சரிக்கை




(லண்டன்)

பிரான்ஸ் தலைநகர் பாரீசில் 'சார்லி ஹெப்டோ' பத்திரிகை அலுவலகத்தில் புகுந்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி 12 பேரை கொன்றனர். அது போன்று இங்கிலாந்திலும் தாக்குதல் நடத்த அல் கொய்தா தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

இங்கிலாந்தின் உளவுத்துறையான எம். 15 நிறுவனத்தின் தலைவர் ஆண்ட்ரூ பார்கஸ் இதை எச்சரிக்கையாக விடுத்துள்ளார். மேலும் அவர் கூறும் போது, போக்குவரத்து வாகனங்கள், முக்கிய இடங்கள் மற்றும் பயணிகள் விமானத்தை கடத்தியும் தாக்குதல் நடாத்தி பலரைக்கொன்று குவிக்க அல்கொய்தா தீவிரவாதிகள் திட்டம் தீட்டியுள்ளனர்.

இத்திட்டத்தை இங்கிலாந்து தீவிரவாதிகள் துணையுடன் செயற்படுத்தவும் முடிவு செய்தனர். அவர்கள் சிரியா மற்றும் ஏமனில் தீவிரவாதி பயிற்சி பெற்று திரும்பியவர்கள் ஆவர். இது போன்ற எச்சரிக்கையை தொடர்ந்து இங்கிலாந்தின் விமான நிலையங்கள் மற்றும் முக்கிய இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே, தீவிரவாதிகள் நடத்திய 3 தாக்குதல்களை இங்கிலாந்து பொலிசார் முறியடித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நவாஸ் ஷெரிப்பிற்கு குறிவைக்கும் தலிபான்கள்



பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்பிற்கு தலிபான்கள் மறை முகமாக குறி வைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானின் பெஷாவர் இராணுவ பள்ளி படுகொலைக்கு பிறகு தீவிரவாதிகளைப்பிடித்து அடுத்தடுத்து மரண தண்டனையை அந்நாட்டின் பிரதமர் நவாஸ் ஷெரீப் நிறைவேற்றி வருகிறார்.

இதனால் அவர் மீது கடுங்கோபத்தில் இருந்த தலிபான்கள் அவரது கட்சித் தலைவர்கள் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டுள்ளனர். இது நவாஸ் ஷெரீப் மீதான மறைமுக தாக்குதல் உத்தரவாக கருதப்படுகிறது.

இதுகுறித்து ஆப்கனில் மறைந்துள்ள தெஹ்ரீகி தலிபான் தலைவர் முல்லா பஸ்லுல்லாவு (Mullah Fazlullah) வீடியோ ஒன்றில் பேசியதாவது, நவாஸ் ஷெரீப் அவர்களே, எங்கள் முதல் எதிரி அவாமி தேசிய கட்சி தான். ஆனால் இப்போது உங்கள் கட்சி தான் எங்கள் முதல் எதிரி. உங்கள் தலைவர்களைத்தாக்க வேண்டும் என பாகிஸ்தானில் உள்ள அனைத்து முஜாகிதீன்களுக்கும் உத்தரவிட்டுள்ளேன். உங்கள் தலைவர்கள் ஒழுங்கான பாதைக்கு வர வேண்டும் என்றும், இல்லையேல் நரகத்திற்குத் தான் செல்ல வேண்டும் எனவும் பேசியுள்ளார்.

# போதை மருந்து விவகாரம்; ஜாக்கிசான் மகனுக்கு சிறை



போதைப் பொருள் பதுக்கியது மற்றும் போதைப் பொருளைப்பயன்படுத்தியது தொடர்பான வழக்கில், தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து, பிரபல நடிகர் ஜாக்கிசானின் மகன் ஜெய்ஸீ சானுக்கு (32) பீஜிங் நீதிமன்றம் 6 மாத கால சிறை தண்டனை விதிததுள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஜெய்ஸீசான் 100 கிராம் போதைப் பொருளுடன், தைவான் நாட்டு நடிகர் கோகாயுடன் கைது செய்யப்பட்டார்.

மிகப்பெரிய நடிகரின் மகனுக்கு போதைப் பொருள் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்பட்டிருப்பது அங்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 2009ஆம் ஆண்டு முதல் சீனாவின் போதைப் பொருள் தடுப்புக்கான தூதராக ஜாக்கிசான் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.


# தற்கொலைத் தாக்குதல் பாகிஸ்தானில் 8பேர் பலி

(ராவல்பிண்டி)

பாகிஸ்தானில் மக்கள் நெரிசல் அதிகமான ராவல்பிண்டியில் நடந்த தற்கொலைப்படைத் தாக்குதலில் எட்டு பேர் பலியாகினர். 25 பேர் காயமடைந்தனர்.

முகமது நபியின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக நேற்று இரவு சிட்டியான் ஹட்டியான் பகுதியில் உள்ள இமாம் பர்காவில் மக்கள் கூடியிருந்த போது இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது. முதலில் இதை தற்கொலைப்படை தாக்குதல் என்று காவல் துறையினர் தெரிவித்தனர். பின்னர் தொலைக் காட்சியில் பேசிய பிராந்திய காவல் துறை அதிகாரியோ, 4 முதல் 5 கிலோ எடை கொண்ட வெடிபொருட்களை இமாம்பர்காவிற்கு வெளியே உள்ள நுல்லா என்ற இடத்தில் தீவிரவாதிகள் வைத்திருக்கலாம் என்று குறிப்பிட்டார்.

ஆனால், சம்பவத்தை நேரில் பார்த்தவர்களோ தற்கொலைப் படையைச் சேர்ந்த ஒரு நபர் தனது பைக்கில் சரியாக 9.20 மணியளவில் வந்ததாகவும், இமாம்பர்காவுக்குள் நுழையும் அவனதுதிட்டம் முறியடிக்கப்பட்டதையடுத்து தன் உடலில் கட்டியிருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளை வெடிகச் செய்ததாகவும் தெரிவித்தனர்.



இந்த தாக்குதலில் எட்டு பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியாகினர். காயமடைந்த 25 பேரை அப்பகுதி மக்கள் மாவட்ட தலைமை மருத்துவ மனை மற்றும் பெனாசீர் புட்டோ மருத்துவமனைக்கும் தங்களது வாகனங்களில் கொண்டு போய் சேர்த்தனர். அவர்களுக்கு தீவி[illegible] சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# ஏயர் ஏசியா விமானத்தின் கறுப்பு பெட்டி தேடும் பணி தீவிரம்

(ஜகார்தா)

'ஏயர் ஏசியா' விமானத்தின் பாகங்களைத்தேடும் பணியில் இந்தோனேஷிய அரசு தீவிரமாக ஈடுபட்டு வந்தது. இந்த தேடுதல் வேட்டையில் சமீபத்தில் அவ்விமானத்தின் வால் பகுதி விழுந்துகிடந்த இடம் கண்டறியப்பட்டுள்ளது

விமானத்தின் வால் பகுதியில் தான் கருப்பு பெட்டியும் இருக்கும் என்பதால் அதில் கருப்பு பெட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ரிமோட் மூலம் இயக்கப்பட்டு, கடலுக்குள் சென்று புகைப்படம் கருவியை வைத்து இந்தோனேஷிய மீட்பு குழுவினர் மற்றும் நீர்மூழ்கி வீரர்கள் கறுப்பு பெட்டியைத் தீவிரமாக தேடி வந்தனர்.

விமானத்தின் வால் பகுதி கிடைத்த இடத்திற்கு அருகே கறுப்பு பெட்டியிலிருந்து வரும் அதிர்வலைகள் உணரப்பட்டதாக தேடுதல் அதிகாரி சுப்ரியாடி தெரிவித்திருந்தார். நீர்மூழ்கி மூலம் அப்பகுதியில் நீச்சல் வீரர்கள் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர்.

இதன் விளைவாக, கடலின் அடியில் சுமார் 30 மீற்றர் ஆழத்தில் மூழ்கியிருந்த விமானத்தின் வால்பகுதியை நேற்று மீட்ட வீரர்கள் அதனை கடலின் மேல்பகுதிக்கு கொண்டுவந்து சேர்த்தனர். மிதவைபைகள் மற்றும் 'கிரேண்' உதவியால் மீட்கப்பட்ட வால்பகுதி நீரின் மேற்பரப்பில் நின்றிருந்த மீட்பு கப்பலில் பத்திரமாக கொண்டு வந்து சேர்க்கப்பட்டது.


# தென்கொரியாவில் தீ

(சியோல்)

தென்கொரியாவில் அடுக்கு மாடி குடியிருப்பில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 3 பேர் பலியாகி உள்ளனர். மேலும் 101 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

10 மாடிகளைக் கொண்ட இந்த குடியிருப்பில் 175 பேர் வசித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. கீழ்தளத்தில் இருந்த தபால் பெட்டியில் பற்றிய தீ கட்டிடம் முழுவதும் பரவியதாக கூறப்படுகிறது. விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# மதத்துக்கு எதிராக அவதூறு சவுதி இளைஞருக்கு 1000சவுக்கடி



(ரியாத்)

சவுதி அரேபியாவைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் ஒரு இணையத்தின் நிறுவுநராக இருந்துவந்தார். இவர் தனது இணைய தளத தில் மதத்துக்கு எதிராக அவதூறாக தகவல் பரப்பி உள்ளார். மேலும் சைபர் கிரைமில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டார். இதற்காக கடந்த 2012ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் அவருக்கு 10 ஆண்டு சிறை தண்டனையும் 1000 சவுக்கடி தண்டனையும் வழங்கி தீர்ப்பு வழங்கப்பட்டது.

50 சவுக்கடியை பொதுமக்கள் முன்னிலையில் நிறைவேற்றவும் உத்தரவிடப்பட்டது. அதன்படி அந்த வாலிபர் நேற்று முன்தினம் சிறையில் இருந்து ஜெட்டாவுக்கு கொண்டு வரப்பட்டார். அங்கு கூடியிருந்த பொதுமக்கள் மத்தியில் அவர் செய்த குற்றம் குறித்தும் தீர்ப்பு குறித்தும் வாசிக்கப்பட்டது. பின்னர் பொதுமக்கள் மத்தியில் நிறுத்தப்பட்ட அவருக்கு 50 சவுக்கடி கொடுக்கப்பட்டது. அப்போது அவர் மிகவும் அமைதியாக இருந்தார். இது போன்று குற்றச் செயலில் ஈடுபடுவோருக்கு தொடர்ந்து தண்டனை நிறைவேற்றப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய தண்டனைக்கு மனித உரிமைகள் அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. வாலிபருக்கு வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்ய வேண்டும். அந்த வழக்கை மீண்டும் நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.

# டெங்கு நுளம்பை கட்டுப்படுத்த நீர்த் தொட்டிகளில் மீன்களை வளருங்கள்

## கொழும்பு டெங்கு நோய்த் தடுப்புப் பிரிவினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த வீடுகளில் உள்ள நீர்த் தொட்டிகளில் மீன்களை வளர்க்குமாறு கொழும்பிலிருந்து யாழ். வந்த டெங்கு நோய்த்தடுப்புப் பிரிவினர் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் அண்மையில் டெங்கு நோய் அதிகரித்த நிலையில் 2 சிறுவர்கள் உயிரிழந்துள்ள நிலையில் டெங்கு நோயினைக் கட்டுப்படுத்தும் வகையில் கொழும்பிலிருத்து டெங்கு நோய்த் தடுப்புப் பிரிவினர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய்த்தாக்கம் அதிகமான பகுதியான நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இவர்களது ஆய்வுகள் இடம்பெற்றன. பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இக்குழுவினருடன் நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

இவ் ஆய்வுக்கு அமைய டெங்கு நுளம்புகள் நன்னீரிலேயே விரைவாக பெருக்கம் அடைவதால் அதை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர வீடுகளில் உள்ள தண்ணீர்த் தொட்டிகளில் மீன் குஞ்சுகளை வளர்ப்பதன் மூலம் இந்நோய்த் தாக்கத்திற்கு ஏதுவான நுளம்புகளை கட்டுப்படுத்த முடியும் என ஆலோசனைகள் இக்குழுவினரால் வழங்கப்பட்டதுடன் இதனைக் கண்டிப்பாக நடைமுறைப் படுத்தினால் டெங்கை கட்டுப் படுத்த முடியும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# விவேகானந்தரின் பிறந்ததினம்; நாளை வவுனியாவில் நிகழ்வு

வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கமும், கலை, இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து சுவாமி விவேகானந்தரின் 153 ஆவது பிறந்ததின நிகழ்வை நடாத்துகின்றன. சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க வளாகத்தில் அமைந்துள்ள சுவாமி விவேகானந்தர் சிலை முன்றலில் சிலையை பராமரிக்கும் ஹட்டன் நஷனல் வங்கியின் அனுசரணையில் தமிழ் மணி அகளங்கன் தலைமையில் நாளை காலை 9.00 மணிக்கு நிகழ்வு நடைபெறவுள்ளது

ஆர்வமுள்ள அனைவரையும் பங்குபெற விழா ஏற்பாட்டாளர்கள் அன்புடன் அழைத்துள்ளார்கள். (11)

# சுத்தமான குடிநீரை கொண்டுவர மாணவர்களுக்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி கிணற்றிலும் ஒயில் கலந்துள்ளமையால் மாணவர்கள் குடி நீரைக்கொண்டு வந்து பருகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி கிணற்றிலும் ஒயில் கலந்த நிலையில் மாணவர்களின் பாவனைக்குதவாத நிலையில் நீர் உள்ளமையால் கல்லூரியில் கற்கும் மாணவர்களை தமது குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய வீட்டில் இருந்து சுத்தமான நீரைக் கொண்டு வந்து அருந்துமாறு கல்லூரி அதிபரினால் அறிவுறுத்தப் பட்டுள்ளது. (17)

# மோடியின் அழைப்பை ஏற்று இந்தியா செல்லும் மைத்திரி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதலில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதி பதியாகப் பொறுப்பேற்றதன் பின்னர் முதலில் இந்தியாவுக்கு அவர் உத்தியோகபூர்வ பயணம் மேற கொள்ளவுள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவின் இந்திய பயணத்தை உறுதி செய்யும் விதமாக, மோடி எங்கள் ஜனாதிபதியை இந்தியாவுக்கு முதலில் வருகை தருமாறு அழைத்துள்ளார். இதனையடுத்து அடுத்த மாதம் ஜனாதிபதி மைத்திரிபால இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# மகிந்த மீது தேவையற்ற வகையில் களங்கத்தை ஏற்படுத்த முயற்சி

## உதயகம்பன்பில குற்றச்சாட்டு



இராணுவச் சதிப்புரட்சி மூலம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்தை கைப்பற்ற முயற்சித்தார் என கூறப்படும் கதைகளை முற்றாக நிராகரிப்பதாக தூய்மையான ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அடுத்தக்கட்ட செயற்பாடுகள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது அதன்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனநாயகத்தை மதித்த ஒரு தலைவர்.

தோல்வியை உணர்ந்து கொண்ட அவர் இன்றைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் பேசி ஜனநாயகத்தை மதித்து அலரி மாளிகையை விட்டு வெளியேறினார்.

அதிகாரத்தில் தொடர்ந்தும் இருக்க அவர் எந்த சந்தர்ப்பத்திலும் இராணுவத்தை பயன் படுத்தவில்லை.

மகிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்து விலகிச் சென்றாலும் அவர் அதிகாரத்தில் இருக்க முயற்சித்தார் என்று எதிர்க்கட்சிகளை சேர்ந்த சிலர் கதைகளைக் கூறி வருகின்றனர்.

ஜனநாயகத் தலைவர் ஒருவரை சர்வாதிகாரியாக கருதி அப்படியான கதைகளைக் கூறுவதை நிராகரிக்கின்றோம்.

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டம் எதார்த்தமானதாக மாற வேண்டும் என பிரார்த்திக்கின்றோம். வீதிகளை நிர்மாணிக்கும் போது கமிஷன் பெற்றதாக கூறியவர்கள் புதிதாக வீதிகளை நிர்மாணிக் கும் போது தயாரிக்கும் மதிப்பீட்டு அறிக்கைகள் குறித்து விழிப்புடன் அவதானிப்போம் எனவும் உதயகம்மன்பில மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டு மக்களுக்கு இன்று விசேட உரை



புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்றையதினம் கண்டியிலிருந்து நாட்டு மக்களுக்கு விசேட உரையை ஆற்றவுள்ளார்.

இன்று காலை 8 மணிக்கு சுதந்திர சதுக்கத்திலிருந்து வாகனப்பேரணியாக தலதாமாளிகைக்கு புறப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்தின தெரிவித்தார்.

பொரகொல்லையில் பண்டாரநாயக்க சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது அதன் பின்னர் தலதாமாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடவுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிற்பகல் 2 மணிக்கு தலதாமாளிகை எண்கோண மண்டபத்திலிருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்ற வுள்ளார்.

இதன்போது நல்லாட்சிக்கான திட்டங்களை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளார். புதிய ஜனாதிபதியின் வாகனப் பேரணியில் இணைந்துகொள்ளுமாறும். ராஜித சேனாரத்தின அழைப்பு விடுத்துள்ளார்.

### இன...

எனவே இந்த வாய்ப்பை பயன்படுத்தி மறு சீரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தி அனைத்து சமூகங்களுக்குமிடையில் சமத்துவத்தை ஏற்படுத்த வேண்டும்.

அதேவேளை 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுலாக்கப்படுவது தொடர்பில் புதிய அரசாங்கத்தை இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### அச்சத்தால்...

சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் அனைவருக்கும் எதிராக க்டும் நடவடிக்கை எடுப்போம். கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் படுகொலைசெய்யப்பட்டது, தாக்கப்பட்டது குறித்தும் விசாரணைகள் இடம்பெறும். எனவும் மைத்திரி குறிப்பிட்டுள்ளார் என்று ராஜித மேலும் தெரிவித்தார்.

### தமிழரசுக்கட்சி...

அடுத்த கட்டமாக இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் மிக விரைவில் நடைபெறவுள்ளது. விசாரணையின் பின்னர் குறித்த உறுப்பினர்களின் பதவி மற்றும் உறுப்புரிமை நீக்குவது தொடர்பாக மத்திய செயற்குழுவில் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழரசுக்கட்சியிலிருந்து தம்மை இடைநீக்கம் செய்யப்படுவதாக தெரிவிக்கப்படும் உத்தியோகபூர்வ கடிதம் எதுவும் தமக்கு கிடைக்கவில்லையென அனந்தி சசிதரன் தினமுரசுக்குத் தெரிவித்தார்.

கூட்டமைப்பின்வசமுள்ள பிரதேசசபைகளில் பல்வேறு குழறுபடிகள் நிகழ்ந்த போதிலும் அவற்றுக்கெதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையெனவும் தமக்கு எதிராக மட்டும் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுமென தாம் கருதவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (25)

### அமைச்சரவையில்...

றது. என்பது தொ்டர்பில் கூட்டமைப்பிற்குள் எவ்விதமான பேச்சுக்களும் நடத்தப்படவில்லை.


அவ்வாறு பேச்சுக்கள் நடத்தப்பட்டதன் பின்னர் அது குறித்து நாங்கள் உண்மையான நிலைப்பாடு என்ன மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பது தொடர்பில் தெரிவிக்க முடியும் என்றார்.

### மைத்திரியின்..

கள் வெளியாகியுள்ளன.

இதன்படி அமையவுள்ள புதிய அமைச்சரவையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முக்கிய பொறுப்பு ஒன்றை அளிக்க முன்வந்துள்ளதாக புதிய அரசுத் தலைமை அறிவித்துள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

# அ.பொ. செல்லையா ஞாபகார்த்த புலமைப்பரிசில் வழங்கல்



மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் இருந்து அதி சித்தி பெற்று பல்கலைக் கழகம் செல்லும் நான்கு மாணவர்கள் A.P.C. Foundation ஆல் புலமைப் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். ரதி மோகன் தனுசன், வினுஜா, துவாரகா, துஷானி ஆகியோரே A.P.C. Foundation அதிபர்களில் ஒருவரான கிள்ளி வளவன் செல்லையா அவர்களால் கௌரவிக்கப்பட்டார்கள்.

மேற்படி புலமைப் பரிசில் வழங்கல் வீரசிங்கம் மத்திய மகாவித்தியாலயத்தில் அதிபர் அம்பலவாணர் தலைமையில் நடைபெற்றது.(11)


# ஆட்சி மாற்றத்தின் ஊடாக வலுவடையும் வர்த்தக உறவு

இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தின் ஊடாக இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையோன வர்த்தகத் தொட்ர்புகள் மேலும் வலுவடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் வர்த்தக சம்மேளத்தினர் இதனைத் தெரிவித்துள்ளதாக ரைம்ஸ் ஒப் இந்திய தெரிவித்துள்ளது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்புகள் ஏற்கனவே சிறந்த நிலையில் உள்ளன.

தற்போது ஏற்பட்டுள்ள ஆட்சிமாற்றமானது மேலும் இதனை வலுப்படுத்தும் என்று இந்திய கைத்தொழில் துறை சார்ந்தவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

# உயர் பாதுகாப்பு கட்டமைப்பில் விரைவில் வருகிறது மாற்றம்



(கொழும்பு)

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள மைத்திரிபால சிறிசேன உயர் பாதுகாப்புக் கட்டமைப்பில் பல மாற்றங்களைச் செய்யவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி விமானப் படைத் தளபதி, இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி ஆகிய பதவிகளில் ஜனாதிபதி மைத்திரிபால மாற்றங்களைக் கொண்டு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் கே.ஏ.குணதிலக எதிர்வரும் 19ஆம் திகதி ஓய்வுபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதுவரை அவரை அப்பதவியில் தொடர அனுமதித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால, அதன்பின்னர் தமது நம்பிக்கையான மூத்த விமானப்படை அதிகாரி ஒருவரை அப்பதவிக்கு நியமிப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா ஆகியோரின் பதவிகளில் புதியவர்களை நியமிக்கவும் ஜனாதிபதி செயற்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

இதேவேளை ஓய்வுக்குரிய காலம் கடந்த பின்னரும் இரண்டு தடவைகள் பதவி நீடிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர ரணசிங்கவை பதவி விலகிச் செல்லுமாறு புதிய அரசுத் தலைமை கோரி யிருப்பதாகவும் தெரிவிக்கப்ப டுகிறது.

எவ்வாறாயினும் பொலிஸ்மா அதிபர் எம்.கே. இளங்கக்கோன் அப்பதவியில் தொடர்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நாட்டைவிட்டு சென்றாரா கே.பி.?

கே.பி. என அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

விமான நிலையத்தின் அதிவிசேட பிரமுகர்கள் பயணிக்கும நுழைவாயிலின் ஊடாக அவர் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளது எனவும், அது குறித்து விசாரணை செய்து வருவதாகவும், நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன இந்திய ஊடகமான இந்துவுக்கு குறிப்பிட்டுள்ளார்.



கே.பி. தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் ஆயுதக் கொள்வனவாளர் மற்றும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தேடப்படுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தப்பிச் செல்லவில்லையென அறிவித்துள்ளார் கே.பி

நாட்டை விட்டுத் தப்பிச் செல்லும் எண்ணம் தனக்கு இல்லையென கேபி என்றழைக்கப்படும் குமரன்பதுமநாதன் தெரிவித்துள்ளார்.

தான் நாட்டைவிட்டு தப்பிச் சென்று விட்டதாக, நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்த கருத்து தவறானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள செஞ்சோலை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் சிறுவர்களை பூராமரிக்கும் தன்னுடைய பணியினை செய்து வருவதாகவும் தான் நாட்டை விட்டு ஒருபோதும் தப்பிச செல்ல மாட்டேன் எனவும் ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் சிரேஸ்ட உறுப்பினரான குமரன் பத்மநாதன் என்றழைக்கப்படும் கே.பி. அதிவிசேட பிரமுகர்கள். பயணிக்கும் நுழைவாயில் ஊடாக நாட்டை விட்டு தப்பிச்சென்றுவிட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

# முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை வீட்டோடு இருக்க அனுமதியோம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை வீட்டோடு விடமாட்டேன். அவர் அரசியலை விட்டு இன்னும் விலகவில்லை என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு தெரிவித்துள்ளார்.

தினேஷ் குணவர்தன, நிமல் சிறிபால டி சில்வா, டளஸ் அழகப்பெரும், அனுர பிரியதர்ஷன யாப்பா, முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோர் இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டனர்.


இதன் போது கருத்து தெரிவித்த முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச,

ஜனாதிபதி முக்கியமான விதத்தில் அலரிமாளிகையை விட்டு வெளியேறினார். அவர் வெளியேறிய சந்தர்ப்பத்தில் நாட்டில் அனேகமானோர் அழுது புரண்டார்கள் நாடு பூராகவும் கண்ணீரால் நிரம்பிக்காணப்பட்டது.

அவர் அரசியலுக்கு பிரியாவிடை தரவில்லை, அவரை வீட்டோடு இருப்பதற்கு அனுமதிக்க மாட்டோம் எனத் தெரிவித்தார்.

# வடக்கில் இராணுவ முகாம்கள் மீது கல்வீச்சு எதுவும் இடம் பெறவில்லை

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு




(கொழும்பு)

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்தில் உள்ள இராணுவ முகாம்களின் மீது கல்வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் வெடிப்பு சத்தங்களை கேட்கக்கூடியதாக இருந்ததாகவும் வெளியான தகவல்கள் பொய்யானவை என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடி ஏற்றப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

எனினும் இவ்வாறான அடிப்படையற்ற செய்திகளில் எந்த உண்மையும் இல்லை என்றும் தேர்தலுக்கு பிந்திய காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும். இவ்வாறான போலி பிரசாரங்களை நம்ப வேண்டாம் என்று பொது மக்கள் கோரப்பட்டுள்ளனர்.

அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மிகவும் அமைதியான முறையில் இருப்பதாகவும் தேசிய பாதுகாப்புக்கான மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த பிரதேசங்களுக்கான பாதுகாப்புகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதேநேரம் அங்கு எந்தவிதமான அசம்பாவிதங்களும் ஏற்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# விழிப்பு நிலையில் புலனாய்வு அதிகாரிகள்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள புலனாய்வு அதிகாரிகள் விழிப்பு நிலையில் இருக்க உத்தரவிட்டப்பட்டுள்ளதாக டெய்லி மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுள்ள நிலையில், மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் சலு கைகளைப் அனுபவித்த சிலர் நாட்டை விட்டுத் தப்பியோடலாம் என்பதாலேயே, கட்டுநாயக்க விமான நிலையம் விழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இரண்டு முக்கிய அரசியல் புள்ளிகளும், முன்னாள் போராளித் தலைவர் ஒருவரும் நாட்டை விட்டுத் தப்பிச் செல்லலாம் என்பதால், கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள புலனாய்வு அதிகாரிகள் விழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய செயலாளர்

(கொழும்பு)

தகவல் ஊடகத்துறை அமைச்சின் புதிய செயலாளராக திட்ட அமுலாக்கல் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி சந்திரசேன மாலியத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தெற்கு அதிவேக அபிவிருத்தி அமைச்சு, தபால் தொடர்பாடல் அமைச்சு ஆகியவற்றில் செயலாளராக கடமையாற்றியுள்ளார்.

இவர் அரச சேவையில் சுமார் 45 வருடங்கள் அனுபவமுள்ள ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கி முனையில் கொள்ளை கனடாவில் தமிழ் இளைஞன் கைது

(ரொறண்டோ)

கனடா தலைநகர் ரொறன்ரோவிலுள்ள நகை மாளிகை ஒன்றில் துப்பாக்கி முனையில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் தமிழ் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

ஸ்காபுரோவைச் சேர்ந்த 26 வயதான (ஆதவன் ரேனு-வசந்தகுமார்) (வயது26) என்பவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

1920 Eglinton Ave வீதி கிழக்கில் அமைந்துள்ள Jewellery Exchange இல் இவர் மேற்கொண்ட துபபாக்கி முனையிலான கொள்ளை முயற்சி தோல்வியடைந்துள்ளது. இவர் மீது மொத்தம் 9 குற்றச்சாட்டுக்கள் பதியப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.




# நல்லிணக்கம், சமாதானம் நிலவ மைத்திரிக்கு உதவத் தயார்

## நோர்வே தெரிவிப்பு

நல்லிணக்கம், சமாதானம் மற்றும் ஜனநாயகம் ஆகியன நிலவும் இலங்கையை ஏற்படுத்துவதற்கு புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு உதவத் தயார் என நோர்வே தெரிவித்துள்ளது.

இலங்கை மக்களுக்கும், புதிய ஜனாதிபதிக்கும் தனது வாழ்த்துக்களை தெரிவிப்பதாக நோர்வேயின் பிரதமர் ஏர்னா சொல்பேர்க் தெரிவித்துள்ளார்.

மக்கள் வாக்களிப்பதற்கு தமக்குள்ள ஜனநாயக உரிமையை பயன்படுத்துவதற்கு உறுதுணையாகவிருந்த தேர்தல்கள் ஆணையாளர், கண்காணிப்பாளர்கள் உட்பட அனைவருக்கும் தனது பாராட்டுகளை தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானம் மற்றும் ஜனநாயகம் நிலவும் அனைவரையும் உள்ளடக்கிய இலங்கையை ஏற்படுத்துவதில் புதிய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்றுவது குறித்து ஆர்வமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

இப்பத்திரிகை இல.373 பிரகான வீதி. யாழ்ப்பாணம் என்னும் மகவரியில் அமைந்துள்ள அர்பகன் அச்சகத்தில் 2015 ஜனவரி 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.